# வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நன்மொழிகள்

| | | |
|---|---|---|
| Book Name | : | Muntakhab Tahreerat Hadhrat Masih Mauud[as] |
| Firt Edition | : | 1989 |
| Present Edition | : | 2017 |
| Copies | : | 1000 |
| Type Setting | : | O.M.Muzzammil Ahmad |
| Publisher | : | Nazarat Nashr-o-Isha'at, Qadian |
| | | Gurdaspur Dist, Punjab-143516, India |
| Printed at | : | Fazl-e-Umar Printing Press, Qadian |
| ISBN | : | |


**குறிப்பு: வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட நன்மொழிகள் என்ற இந்த நூல் இதற்கு முன் 1989-ஆம் ஆண்டு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நூற்றாண்டு விழாவின்போது வெளியிடப்பட்டது. தற்போது தேவையைக் கருதி மீண்டும் வெளியிடப்படுகிறது.**

□

نحمده ونصلى على رسوله الكريم

இந்த நூலிலுள்ள கருத்து, லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற தூய கலிமாவின் மீது நேசம் கொண்ட குற்றத்திற்காக சிறைபிடிக்கப்பட்டவர்கள், வழக்குகளையும், சிறைப்பிடிப்பையும், கொடுமைப்படுத்தப்படுவதையும் கொலை செய்யப்படுவதையும் பிலால் (ரலி) அவர்களின் ஆன்மாவுடன் சகித்துக்கொள்ளும் அஹ்மதிகளின் சார்பாக உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் நூற்றாண்டு விழாவின் சந்தர்ப்பத்தில் (1989-ஆம் ஆண்டு) வழங்கும் ஒரு தூய அன்பளிப்பாகும்.

نحمده و نصلی علی رسوله الکریم و علی عبده المسیح الموعود

## பதிப்புரை

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் நமது அன்பிற்குரிய எஜமானரும் அனைத்துலக தலைவரும் காத்தமுல் அன்பியாவும் ஆகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் ஆன்மீக மகனாவார்கள். அவர்களை அல்லாஹ் இக்காலத்தில் மனித குலத்திற்கு வழிகாட்டுவதற்காகவும், வழிநடத்துவதற்காகவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகவும் இறுதி காலத்தின் இமாம் ஆகவும் அனுப்பியிருக்கிறான்.

அவர்கள் இறைவனால் நியமிக்கப்பட்ட பிறகு இஸ்லாத்திற்கு ஆதரவாகவும் உதவியாகவும் தனது மகத்தான எழுதுகோலினால் ஜிஹாது செய்ய ஆரம்பித்தார்கள். அதனால் அல்லாஹ் அவர்களுக்கு **சுல்தானுல் கலம்** (எழுதுகோலின் அரசர்) எனப் பட்டம் சூட்டினான். அவர்களின் எழுத்துகள் உலகில் மகத்தான புரட்சியை உருவாக்கி விட்டது. மேலும் இஸ்லாமிய உலகில் ஒரு புதிய

வாழ்வை உருவாக்கி விட்டது. மேலும் முஸ்லிம்களின் சோக முகங்களில் போலிவுகள் தென்படத் தொடங்கின.

**1889**-ஆம் ஆண்டு இஸ்லாத்தை உயிரூட்டும் இறைத் திட்டம் உலகில் முறைப்படி ஆரம்பமானது. உண்மையான இஸ்லாத்தின் கொடியை உயர்த்துகின்ற, அதற்காக அர்ப்பணிக்கின்ற அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையினால் நிலைநாட்டினார்கள். **1989**-ஆம் ஆண்டில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நூற்றாண்டு நன்றி விழா கொண்டாட்டத்தையொட்டி உலக அளவில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் அவர்களின் எழுத்துகளிலிருந்து பல்வேறு மேற்கோள்களின் மொழியாக்கங்கள் பல்வேறு மொழிகளில் வெளியிடப்பட்டன.

சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃஃபத்துல் மஸீஹ் அவர்களின் அனுமதி மற்றும் ஒப்புதலுடன் ஜமாஅத் சகோதரர்களின் தேவையை கருத்தில் கொண்டு காதியான் நஸாரத் நஷ்ரோ இஷாஅத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட நன்மொழிகளை பொது மக்களின் பயனுக்காக வெளியிடுகிறது.

இந்த நூல் வெளியீட்டை அல்லாஹ் அருளுக்குரியதாக ஆக்குவானாக. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூய சொற்களிலிருந்து உரிய முறையில் பயன்பெறும் நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

எளியவன்

*ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப்*
நாஸிர் நஷ்ரோ இஷாஅத், காதியான்

□
نحمده ونصلى علىٰ رسوله الكريم

## முன்னுரை

இன்றிலிருந்து சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் **(1835-1908)** இறைவன் தன்னை இக்காலத்தை சீர்திருத்துவதற்காக நியமித்திருக்கிறான் என்றும், தாமே இறுதி காலத்தின் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும், இஸ்லாம் எல்லா மார்க்கங்களின் மீதும் வெற்றி கொள்வது தம் மூலமாகவே நியமிக்கப்பட்டுள்ளது என்றும், தம்மைப் பற்றியே ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்கள் முன்னறிவித்தார்கள் என்றும் வாதிட்டார்கள்.

அவர்கள் இந்த வாதம் செய்து ஒரு நூற்றாண்டு சென்று விட்டன. இந்த காலகட்டத்தில் அவர்களின் ஜமாஅத் அல்லாஹ்வின் ஆதரவு மற்றும் உதவியினால் மிகவும் எல்லையற்ற கடினமான நிலைமைகள் மற்றும் எல்லாவிதமான எதிர்ப்புகள் இருந்தும் உலகின் எல்லாப் புறங்களிலும் வியத்தகு முன்னேற்றம் அடைந்தது. மேலும் இப்போது (அதாவது இந்த முன்னுரை எழுதப்படும் **1989-**

ஆம் ஆண்டில்) இந்த ஜமாஅத் நூற்றுப் பதினான்கு நாடுகளில் நிலைநாட்டப்பட்டு விட்டது.

ஜமாஅத்தின் தூதையும், அதன் கண்ணியத்தையும் அது எடுத்து வைக்கும் நிகழ்ச்சியையும் பற்றி சரியான புரிதலைப் பெறுவதற்கும், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் வாதங்களை சரியான முறையில் புரிவதற்கும் அவர்களின் எழுத்துக்களை நேரடியாக விருப்பு வெறுப்பின்றி படிப்பதே பொருத்தமான வழியும், உறுதிப்பாடான வழிமுறையும் ஆகும்.

இந்த நூலில் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களின் சில உரைநடைகள், கவிதைகளிலிருந்து சில மேற்கோள்கள் எடுத்து வைக்கப்படுகின்றன. அவை மார்க்கத்தின் அடிப்படையான தூண்கள் மற்றும் ஜமாஅத்தின் கொள்கைகள் பற்றி விளக்குகின்றன. இவற்றை படிப்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 80 க்கும் அதிகமான மதிக்கத்தக்க நூல்களைப் பற்றி எந்தவொரு தவறான எண்ணமும் கொள்ளாமல் இருப்பதற்கு உதவுகின்ற அதே நேரத்தில் அவற்றைப் படிப்பது சிந்தனைக்கு ஒளியூட்டக் கூடியதற்கும், உள்ளங்களுக்கு பிரகாசத்தை அளிப்பதற்கும், ஆன்மாக்களுக்கு வளத்தை வழங்குவதற்கும் காரணமாக இருக்கும் என நம்புகிறோம்.

உலகின் பல்வேறு மார்க்கங்கள் தமது தூய வேதங்களில் முன்னறிவிக்கப்பட்டதற்கேற்ப எதிர்பார்த்துக் கொண்டிருந்த இறுதி காலத்தின் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி என இறைவன் தனக்கு அறிவித்திருக்கிறான் என அஹ்மதிய்யா

ஜமாஅத்தின் தோற்றுநர் கூறினார்கள். இந்துக்கள் கிருஷ்ணரையும், புத்த மதத்தை பின்பற்றுபவர்கள் கவ்தம புத்தரையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். யூதர்களும், கிறித்தவர்களும் ஒரு மஸீஹை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். மேலும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவதாக முஸ்லிம்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். எல்லா மார்க்கங்களிலும் வாக்களிக்கப்பட்டிருக்கின்றவர் ஒரு நபராகவே இருக்க வேண்டும் என்பது இறை வேதத்தின்படி விதிக்கப்பட்டிருந்தது. அவர் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்களின் உம்மத்தியாகவும், அவரைப் பின்பற்றுபவராகவும் இருக்க வேண்டியதிருந்தது. அவருடைய தோற்றத்தின் நோக்கம் எல்லா மனித குலத்தையும் அல்லாஹ்வின் கடைசி மார்க்கமும் முழுமையான வாழ்க்கை நெறிமுறையுமான இஸ்லாத்தின் கொடியின் கீழ் ஒன்று சேர்ப்பதாகும். தமது தோற்றம் என்பது எத்தகைய பொன்னான காலத்தை எதிர்பார்த்து மனித குலத்தின் எண்ணற்ற தலைமுறைகள் காலம் சென்று விட்டனவோ அதன் துவக்கமாகும் என அவர்கள் கூறினார்கள். நீதி, சமாதானம் ஆகியவை நிலைபெற்றிருக்கும் அந்த பொன்னான காலகட்டத்தில் பூமியில் வாழும் எல்லா மனிதர்களுக்கும் ஒரே மார்க்கம்தான் இருக்கும். அதாவது இஸ்லாம் மார்க்கம். மேலும் ஒரே தலைவைர்தான் இருப்பார். அதாவது ஹஸ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

இந்த வாக்களிக்கப்பட்டவருடைய தோற்றத்தின் உயரிய நோக்கங்களைப் பெறுவதன் நிகழ்ச்சி உலக அளவில் இருப்பது மட்டுமின்றி காலத்தைப் பொருத்தவரை பல

நூற்றாண்டுகள் வரை பரவியிருக்கிறது. எனவே தமது உயிரையும் நேரத்தையும் தொடர்ந்து தியாகங்கள் செய்து இஸ்லாத்தின் வெற்றியின் திட்டத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் முயற்சியை மறுமை வரை தொடர்வதற்கு ஒரு ஜமாஅத் தேவைப்பட்டது. இதன்படி அல்லாஹ்வின் கட்டளையினால் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் 1989-ஆம் ஆண்டு மார்ச் 23-ஆம் தேதி புனித நாளில் இந்தியாவிலுள்ள லூதியானா நகரத்தில் தம்மை இறைவனின் தேர்ந்தெடுக்கப்பட்டவராக உறுதி கொண்டவர்களும், தமது அனைத்து வாதங்களின் மீதும் உறுதி கொண்டவர்களும், இந்த முயற்சியில் தமக்கு ஒத்தாசை செய்வதற்கு உறுதி கொண்டவர்களுமாகிய தூய மனம் உடையவர்களிடம் பைஅத் வாங்கினார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பெயரான அஹ்மத் என்பதை பொருத்தமாகக் கொண்டு தமது ஜமா அத்திற்கு அஹ்மதிய்யா ஜமாஅத் எனப் பெயரிட்டார்கள்.

அவர்கள் தமது வாழ்வில் ஆரியர்களும், கிறித்தவ பாதிரிமார்களும் இஸ்லாத்தின் மீது செய்த தாக்குதல்களை பாதுகாப்பதற்காகவும் திருக்குர் ஆனின் போதனைகளை வெளியிடுவதற்காகவும் 80-க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றினார்கள். மேலும் குறைந்த வசதிகள் இருந்தபோதிலும் உலகில் இஸ்லாத்தை பரப்பினார்கள். 1908-ஆம் ஆண்டு அவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களின் ஜமாஅத்தில் கிலாஃபத்தின் அமைப்பு நிலைபெற்றது. அதன் அருளால் ஜமாஅத் தனது ஆற்றல்களை ஒன்று சேர்த்து உலகத்தின்

மூலை முடுக்குகளில் இஸ்லாத்தை தப்லீக் செய்வது மற்றும் திருக்குர்ஆனை வெளியிடுவது ஆகிய மகத்தான பணியை தொடர்ந்தது.

1947-ஆம் ஆண்டு துணைக்கண்டமான இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின்போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இலட்சக்கணக்கான நபர்களுக்கு பாகிஸ்தான் ஹிஜ்ரத் செய்ய நேர்ந்த காலத்தில் அங்கு (அதாவது பாகிஸ்தானிலுள்ள) பஞ்சாபில் சனாப் ஆற்றின் ஓரத்தில் ஒரு புதிய மேலிடத்தை ஜமாஅத்திற்கு உருவாக்க வேண்டியது ஏற்பட்டது. அது ரப்வா என்ற பெயரால் புகழ்பெற்றது.

ஆரம்பத்திலிருந்தே பகைவர்களான ஆலிம்களின் சார்பாக ஜமாஅத்திற்கு எதிராக திட்டங்கள் தீட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் 1953, 1974, 1984 ஆகிய ஆண்டுகளிலுள்ள சதித் திட்டங்கள் அதிகமான பெயர் பெற்றவை. கடைசியாக குறிப்பிடப்பட்ட (1984-ஆம் ஆண்டின்) திட்டத்திற்கு அக்காலத்திலுள்ள அரசாங்கத்தின் முழுமையான ஆதரவும் உதவியும் இருந்தது. அரசாங்கம் ஜமாஅத்தின் முன்னேற்றத்தை தடை செய்வதற்காகவும், அஹ்மதிகளை அடிப்படையான மனித உரிமைகளிலிருந்து விலக்கிவைத்து பல அநியாயமான சட்டங்களை இயற்றியது. அவற்றில் 1984-ஆம் ஆண்டின் ஆன்டி அஹ்மதிய்யா சதாரதீ ஆர்டினன்ஸ் எண் XX பெயர் பெற்றது. இதன்படி பாக்கிஸ்தானில் அஹ்மதிய்யா ஜமாஅத்தை, முஸ்லிம் அல்லாதவர்கள் என்றும், காஃபிர்கள் என்றும் கூறப்பட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள் மிகவும்

பொறுமையுடனும், சகிப்புத்தன்மையுடனும் ஆலிம்களின் முயற்சிகளை தோல்வியுறச் செய்தனர்.

பாக்கிஸ்தானில் அஹ்மதிகளுக்கு எதிரான இந்த அநியாயமான நடவடிக்கைகளின் விளைவாக மற்ற நாடுகளிலுள்ள அஹ்மதிகளிடம் நிகரற்ற ஆன்மீக விழிப்புணர்வு உருவானது. மேலும் ஜமாஅத் இந்த காலகட்டத்தில் முன்னரை விட மிக அதிகமாக முன்னேற்றம் அடைந்தது.

**1989**-ஆம் ஆண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நூற்றாண்டு நன்றி விழாவை முன்னிட்டு உலக அளவில் உருவாக்கப்பட்ட நிகழ்ச்சியிலுள்ள குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த சந்தர்ப்பத்தில் இறைவனிடத்தில் அவனது அருளை வெளிப்படுத்துவதற்காகவும், தனது நன்றியுணர்வை வெளிப்படுத்துவதற்காகவும் நூற்றுக்கும் அதிகமான மொழிகளில் திருக்குர்ஆனின் தேர்ந்தெடுக்கப்பட்ட வசனங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட நபிமொழிகள், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநரின் எழுத்துக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மேற்கோள்கள் ஆகியவற்றின் மொழியாக்கங்களை வெளியிடுகிறது. இந்த நூல் அந்த மகத்தான அருளுக்குரிய திட்டத்தின் ஒரு பகுதியேயாகும்.

**நஸாரத் இஷாஅத், ரப்வா**

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | அல்லாஹ் | 15 |
| 2. | இறைவனைக் காணுதல் | 17 |
| 3. | இறைவன் தன் நன்றியுள்ள அடியார்களுடன் நடந்து கொள்ளும்முறை | 18 |
| 4. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) | 24 |
| 5. | திருக்குர்ஆன் | 35 |
| 6. | வஹி மற்றும் இல்ஹாம் (இறையறிவிப்புகள்) | 42 |
| 7. | நம் கோட்பாடுகள் | 45 |
| 8. | வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்தஸ்து | 48 |
| 9. | தூய ஜமாஅத்தை நிலைநாட்டுவதும் அறிவுரைகளும் | 51 |
| 10. | அஹ்மதிய்யத்தின் எதிர்காலம் | 62 |
| 11. | இறுதி வெற்றி | 63 |
| 12. | ஆன்மா | 64 |
| 13. | மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கை | 65 |
| 14. | உலக சமயங்கள் | 66 |
| 15. | பாவம் | 68 |
| 16. | மீட்பு | 69 |

| | | |
|---|---|---|
| 17. | ஜிஹாது (இறை வழியில் அறப்போர்) | 70 |
| 18. | துஆ (பிரார்த்தனை) | 73 |
| 19. | மக்களிடத்து அனுதாபம் காட்டுதல் | 74 |
| 20. | வானவர்கள் | 75 |
| 21. | யாஜூஜ் மாஜூஜ் ஆகியோரின் உண்மை நிலை | 77 |
| 22. | ஒளியின் காலம் | 78 |

# *1.* அல்லாஹ்

“நமது சொர்க்கம் நமது இறைவனே. நமது பேரின்பங்கள் நம் இறைவனிடத்தே உள்ளன. ஏனெனில் நாம் அவனைக் கண்டோம். அழகு அனைத்தும் அவனிடத்தே கண்டோம். இந்தச் செல்வம் உயிரைக் கொடுத்தாயினும் பெறத்தக்கது. ஒருவர் தன்னை முற்றிலும் இழந்தாகிலும் பெறத்தக்கது இம்மாணிக்கம். இழப்பிற்குரியோரே! இந்த நீரூற்றின் பக்கம் விரைந்து வாருங்கள். இது உங்கள் தாகத்தைத் தணிக்கும். இது உங்களைக் காக்கும் உயிர் ஊற்றாகும். நான் என்ன செய்வேன்? இந்த செய்தியை உள்ளங்களில் எவ்வாறு உறையச் செய்வேன்? இதுதான் உங்கள் இறைவன் என்று மக்கள் கேட்கும் பொருட்டு தெருக்களிலே எந்த முரசை அறைந்து தெரிவிப்பேன்? மக்கள் கேட்கும் பொருட்டு அவர்கள் காதுகள் திறக்க என்ன மருத்துவம் செய்வேன்? உண்மையிலேயே நீங்கள் இறைவனுக்குரியவர்களாக ஆகிவிட்டால், அந்த இறைவன் உங்களுக்கே உரியவன் என்பதை உறுதியாக உணர்ந்து கொள்ளுங்கள்.”

*(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 21,22)*

கேட்பவர்களே! கேளுங்கள். அல்லாஹ் உங்களிடம் என்ன நாடுகிறான்? அது நீங்கள் அவனுக்கே உரியவர்களாகி விட வேண்டும் என்பதைத்தான். வானத்திலோ, பூமியிலோ

அவனுக்கு எவரையும் இணைவைக்காதீர்கள். முன்னர் உயிருடன் இருந்ததைப் போன்று இப்போதும் உயிருடன் இருக்கும் இறைவனே நம் இறைவன். முன்னர் அவன் பேசியதைப் போன்று இப்போதும் அவன் பேசுகின்றான். முன்னர் அவன் கேட்டுக் கொண்டிருந்ததைப் போன்று இப்போதும் அவன் கேட்கிறான். இந்த காலத்தில் அவன் கேட்கிறான்; ஆனால் பேசுவதில்லை என்ற சிந்தனை தவறானது. மாறாக, அவன் கேட்கவும் செய்கிறான்; பேசவும் செய்கிறான். அவனுடைய எல்லா பண்புகளும் நிலையானவையும், என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியவையுமாகும்.

அவனுடைய எந்தப் பண்பும் செயல் இழந்து விடவில்லை. இனி ஒருபோதும் செயலிழந்தும் போகாது. ஈடிணையற்ற தனித்தவன் அவனே. அவனுக்கு மகனோ, மனைவியோ இல்லை. இணை இல்லாதவன் அவனே. தனக்கென குறிப்பிட்ட பண்பைக் கொண்டவன் அவனைப் போன்று வேறு எவனுமில்லை. அவனுக்கு நிகராக எவனுமில்லை........குணயியல்புகளில் அவனை ஒத்தவன் வேறெவருமில்லை.

அவனுடைய ஆற்றல்களில் எந்தக் குறையும் இல்லை. அவன் தொலைவில் இருந்தாலும் நெருக்கமானவன்; நெருங்கி இருந்தாலும் தொலைவில் உள்ளவன்............ அவன் மிக உயரியவன்; ஆயினும் அவனுக்குக் கீழ் எதுவும் இருப்பதாகக் கூற முடியாது. அவன் அர்ஷில் உள்ளவன்; ஆயினும் பூமியில் அவன் இல்லை எனக் கூற முடியாது.

அவன் எல்லா முழுமையான பண்புகளையும் ஒருங்கே கொண்டவன். அவன் எல்லா உண்மையான புகழின் தோற்றமாவான். அவன் வெளிப்படுத்துகின்ற நற்பண்புகள் புகழத்தக்கவையாகும். அவன் எல்லா சிறப்புகளின் தலையூற்றாவான். அவன் எல்லா ஆற்றல்களையும் ஒருங்கே கொண்டவன் ஆவான். எல்லா நன்மைகளின் ஆரம்பமும் எல்லா பொருள்களின் முடிவும் அவனே ஆவான். எல்லா நாடுகளுக்கும் அவனே எஜமானன். முழுமைகள் எல்லாம் அவனிடத்தில் நிறைந்துள்ளன. எல்லாக் குறைகளிலிருந்தும், பலவீனங்களிலிருந்தும் தூய்மையானவன் ஆவான். பூமியில் வாழும் அனைவரும் விண்ணிலுள்ளவையும் வணங்கத்தக்க தனிச்சிறப்பு வாய்ந்தவன் அவனே ஆவான்.

*(அல்வஸிய்யத். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 309-310)*

## 2. இறைவனைக் காணுதல்

எவர் சந்தேகங்களிலிருந்து மீட்சி பெற மாட்டாரோ அவர் ஆக்கினையிலிருந்தும் பாதுகாப்பு பெற மாட்டார். இவ்வுலகில் இறைவனைப் பார்க்கும் பேறிழந்தவர்கள் மறுமையிலும் இருளிலேயே இருப்பர். இவ்வுலகில் குருடராக இருப்போர் மறுமையிலும் குருடராக இருப்பர் என இறைவன் கூறுகிறான். (திருக்குர்ஆன் 17:73 காண்க).

*(கிதாபுல் பரிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 65)*

## 3. நல்லடியார்களுடன் இறைவன் நடந்து கொள்ளும் முறை

உண்மையில் அந்த இறைவன் மிக்க வல்லவனும், ஆற்றல் மிக்கவனும் ஆவான். அவனிடம் நேசத்துடனும் நன்றியுடனும் நடப்பவர்கள் ஒருபோதும் வீணாக மாட்டார்கள். எதிரி தன் சூழ்ச்சிகளால் அவர்களை அழித்து விடுவேன் என கூறுகின்றான். தீய நோக்கம் உடையவர்கள் அவர்களை நசுக்கிவிட எண்ணுகின்றனர். ஆனால் இறைவன் கூறுகிறான்: அறிவிலியே! நீ என்னுடன் மோதுவாயா? என் அன்பிற்குரியவரை இழிவுபடுத்த முடியுமா? உண்மையில், வானத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவை தவிர பூமியில் எதுவும் நிகழாது. உலகில் உள்ள எந்தக் கையும் வானத்தில் தீர்மானிக்கப்பட்ட அளவே அன்றி நீள முடியாது. எனவே அநீதிக்கான திட்டங்களைத் தீட்டுபவர்கள் மிக அறிவிலிகளே ஆவர். அவர்கள் தங்களின் வெறுக்கத்தக்க, வெட்கமில்லாத திட்டங்களைத் தீட்டியபோது மிக மேலான இறைவனை மறந்து விட்டனர். அவனுடைய நாட்டமின்றி ஓர் இலை கூட உதிராது. எனவே அவர்கள் தங்கள் திட்டங்களில் எப்போதும் தோல்வியுற்றவர்களாகவும் வெட்கித் தலைகுனிந்தவர்களாகவும் இருக்கின்றனர். மேலும் அவர்களின் தீங்கினால் நல்லடியார்களுக்கு எந்த இழப்பும் ஏற்படுவதில்லை. மாறாக, இறைவனின் அடையாளங்கள் பரவலாக வெளிப்படுகின்றன. இறைவனை பற்றிய மக்களின் ஞானம் வளர்கிறது. ஆற்றல் மிக்க வல்லவனாகிய அந்த இறைவன் புறக் கண்ணுக்குப் புலப்படுவதில்லை என்றாலும் அவன் தன் அற்புதமான அடையாளங்களால் தன்னை வெளிப்படுத்துகிறான்.

*(கிதாபுல் பரிய்யா முன்னுரை. ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 19-20)*

இறைவன் வானங்கள் பூமி ஆகியவற்றின் ஒளி ஆவான். அதாவது, காணும் ஒளியனைத்தும் - அது மேலே இருப்பினும் கீழே இருப்பினும், ஆன்மாக்களிலோ உடல்களிலோ இருப்பினும், இயல்பானதாகவோ ஒன்றைச் சார்ந்ததாகவோ இருப்பினும், வெளிப்படையானதாகவோ மறைமுகமானதாகவோ இருப்பினும், சிந்தனைகளில் இருப்பினும் உண்மையானதாக இருப்பினும் அது அவனுடைய அருட்கொடையாகும். இது, அனைத்துலகங்களையும் படைத்துக் காத்தோம்பும் இறைவனின் பொதுவான அருள் எல்லாவற்றையும் சூழ்ந்திருக்கிறது என்பதைக் காட்டும் அத்தாட்சியாகும். அவனுடைய அருளுக்கு அப்பாற்பட்டது எதுவுமில்லை.

அனைத்து அருளின் பிறப்பிடம் அவனே; அனைத்து ஒளியின் மூல காரணமும், எல்லா கருணையின் தலையான ஊற்றும் அவனே ஆவான். எல்லா உலகங்களும் நிலைத்திருப்பது அவன் இருப்பதனாலேயே ஆகும். மேலோர் கீழோர் ஆகியோரின் அடைக்கலம் அவனேயாவான். அவன் எல்லாவற்றையும் இல்லாமையாகிய இருட்டறையிலிருந்து வெளிக்கொணர்ந்து இருப்பு எனும் ஆடையை வழங்கினான். தன்னளவில் வாழக்கூடியதோ நிலைத்து வாழக்கூடியதோ அவனைத் தவிர வேறெதுவுமில்லை. மற்றவையெல்லாம் அவன் அருளைப் பெற்றே வாழ்கின்றன. இன்னும் கூறுவதென்றால், மண்ணகமும், விண்ணகமும், மனிதனும், விலங்கும், கற்களும், மரங்களும், ஆன்மாக்களும், உடல்களும் எல்லாம் அவன் அருளினாலேயே நிலைத்துள்ளன.

*(பராஹீனே அஹ்மதிய்யா அடிக் குறிப்பு. ரூஹானீ கஸாயின் தொகுதி 1 அடிக்குறிப்பு பக்கம் 191-192)*

*என்றென்றும் நிலைத்தவனுக்கே எல்லாப் புகழும்*
*அவனுக்கு நிகரானவனும் ஒப்பானவனும் இல்லை*

*என்றென்றும் இருப்பவன் அவனே மற்றவையெல்லாம்*
*இறப்பவையே அவனைத் தவிர பிறவற்றில் கொள்ளும்*
*அன்பெல்லாம் கற்பனையே*

*என் இதயம் கவர்ந்தவன் அவனே! அவனன்றி யாரையும்*
*அறியேன் என்னைக் காணும் அவன் எத்துணை தூயவன்!*

*என் உள்ளம் வியக்கிறது எல்லாருக்கும் ஏந்தல் அவனே*
*எல்லாரும் அறிந்ததே அவன் கருணை நம் உள்ளம்*
*நிறைந்தவனும் நம் அன்பிற்குரியவனும் அவனே*

*அவனன்றி வாழ்வில்லை மற்றவையெல்லாம் பொய்யே*
*இந்த நாள் அருளுக்குரியதாகுக என்னைக் காணும் அவன்*
*எத்துணை தூயவன்!*

***(மஹ்மூது கீ ஆமீன். ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 319.)***

**நான் உண்மையாகக் கூறுகிறேன். ஆன்மாக்களில் உண்மையான தேட்டமும், உள்ளங்களில் உண்மையான தாகமும் ஏற்பட்டால் மக்கள் இவ்வழியை - இந்த முறையைத் தேடட்டும். ஆனால் அந்த வழி எவ்வாறு திறக்கும்? அந்தத் திரையைப் போக்கும் முறை எது? தேடுபவர்களுக்கு நான் உறுதியளிக்கிறேன். இஸ்லாம் ஒன்றுதான் அந்த வழியைப் பற்றிய நற்செய்தியை வழங்குகிறது.**

மற்ற சமுதாயங்கள் இறையறிவிப்பு என்ற அமைப்புக்கு என்றோ முற்றுப் புள்ளி வைத்து விட்டன. இது இறைவன் வைத்த முற்றுப் புள்ளியன்று என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். மாறாக, மனிதன் இழப்பின் காரணமாக ஒரு சாக்குப்போக்கை ஏற்படுத்திக் கொள்கிறான்.

மேலும் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். நாம் கண்ணின்றி காண முடியாததைப் போன்று காதின்றி கேட்க முடியாததைப் போன்று நாவின்றி பேச முடியாததைப் போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்கவும் இயலாது.

நான் ஒரு காலத்தில் இளைஞனாக இருந்தேன். இப்போது முதுமை அடைந்து விட்டேன். ஆனால் இந்தத் தூய ஊற்றின் உதவியின்றி தெளிவான இறைஞானத்தின் கோப்பையை அருந்திய எவரையும் நான் கண்டதில்லை.

***(இஸ்லாமீ உஸூல் கீ ஃபிலாஸஃபி. ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 442-443)***

*எல்லா ஒளியின் பிறப்பிடமாகிய அந்த ஒளி தெளிவானது முழு உலக கண்களும் காணுவதற்குரிய கண்ணாடியாக அது விளங்குகிறது*

*நேற்றிரவு நான் நிலவைக் கண்டு மிக வியப்புற்றேன்*
*ஏனெனில் அதன் ஒளியில் என் அன்பனின் அழகின்*
*அடையாளங்கள் இருந்தன*

*அந்த அழகின் முழுமை என் உள்ளத்தில் அலை மோதுகிறது எனவே ஸார் ஸார் அல்லது துருக்கி குறித்து என்னிடம் பேச வேண்டாம்*

*என் அன்பனே! எங்கும் உன் வல்லமையின் தோற்றம் அற்புதமே! எத்திசை நோக்கினும் அது உன்னைக் காணும் வழியே சூரியனின் ஊற்றில் உனது அலைகள் தென்படுகின்றன விண்மீன் ஒவ்வொன்றிலும் உன் ஒளி விளையாடுகிறது*

*நீ உன் கைகளால் ஆன்மாக்களில் உப்பைத் தூவினாய் இதன் காரணமாக நேசர்களின் அன்பின் குரல் ஒலிக்கின்றன*

*ஒவ்வோர் அணுவிலும் எவ்வளவு அற்புதமான சிறப்பினை நீ வைத்துள்ளாய்! இந்த இரகசியக் கருவூலம் முழுவதையும் யாரால்தான் கற்க முடியும்?*

*உன் வல்லமையின் எல்லையை எவரும் கண்டதில்லை சிக்கலான முடிச்சின் கட்டினை யாரால்தான் அவிழ்க்க முடியும்?*

*உன் வனப்பின் தோற்றமே இனிய காட்சிகளில் உள்ளது. உன் பண்பின் வண்ணமே ஒவ்வொரு மலரிலும் பூஞ்சோலையிலும் உள்ளது*

*அழகிய பொருள் ஒவ்வொன்றின் போதைக் கண்ணும் கணந்தோறும் உன்னையே காட்டுகிறது சுருண்ட பேழையின் சுட்டு விரல் உன்னையே சுட்டிக் காட்டுகிறது*

***(சுர்மயே சஷ்மே ஆர்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 52)***

ஓரிறை கொள்கை ஓர் ஒளியாகும். அது, அகத்திலும் புறத்திலும் உள்ள பொய்க் கடவுள்களை மறுப்பதன் பின் உள்ளத்தில் உருவாகிறது. பின்னர் அது மனித உடலின் ஒவ்வோர் அணுவிலும் பரவி விடுகின்றது. எனவே இதனை அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் மூலமேயன்றி மனித ஆற்றல்களால் எவ்வாறு பெற முடியும்? மனிதனின் வேலை தற்பெறுமையைக் கொன்று விட்டு தீய தன்மைகளை விட்டுவிடுவதாகும். தான் அறிவில் வளர்ந்தவன் என்று நினைக்காமல் தன்னை ஓர் அறிவிலியாக எண்ணி பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும். அப்போது ஏகத்துவத்தின் ஒளி இறைவனிடமிருந்து அவர் மீது இறங்கி அவருக்கு புத்தம் புதிய ஒரு வாழ்வை அளிக்கிறது.

*(ஹக்கீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 148)*

அந்த இறைவன் மிகவும் நன்றியுணர்வுள்ள இறைவன் ஆவான். மேலும் நன்றியுணர்வுள்ளவர்களுக்கு அவனது அற்புதமான வேலை வெளிப்படுகின்றன. அவர்களை விழுங்கி விட வேண்டுமென்று உலகம் விரும்புகிறது. ஒவ்வோர் எதிரியும் அவர்கள் மீது பல்லைக் கடிக்கின்றார். ஆனால் அவர்களின் நண்பன் (ஆகிய இறைவன்) அவர்களை எல்லா அழிவிலிருந்தும் காப்பாற்றுகிறான். மேலும் எல்லா களத்திலும் அவர்களுக்கு வெற்றியை வழங்குகிறான். அந்த இறைவனை விட்டு விடாதவர் எவ்வளவு நல்லவர் ஆவார்!

*(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 20)*

## *4.* ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

மனிதனுக்கு அருளப்பெற்ற - அதாவது முழுமையான மனிதனுக்கு அருளப்பெற்ற உயர்தகுதியுடைய அந்த ஒளி வானவர்களிலோ, விண்மீன்களிலோ, சந்திரனிலோ, சூரியனிலோ இருந்ததில்லை. மேலும் பூமியிலுள்ள கடல், ஆறு ஆகியவற்றிலும் இருந்ததில்லை. அது மாணிக்கம், மரகதம், நீலமணி, முத்து ஆகியவற்றிலும் இருந்ததில்லை. அதாவது பூமி, வானம் ஆகியவற்றில் எப்பொருளிலும் அது இருந்ததில்லை. அது மனிதனிடமே இருந்தது. அதாவது முழுமையான மனிதனிடம். அதன் முழுமை, முடிவு, உயர்வு, மேன்மை எல்லாம் ஒருங்கே கொண்டவர் நம் தலைவரும், நம் அன்பிற்குரியவரும், தூதர்களின் தலைவரும், உயிரினங்களில் உயர்ந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள்.

எனவே அந்த ஒளி அவர்களுக்கு வழங்கப்பட்டது. பின்னர் அவர்களின் பண்புகளை சிறிதேனும் கொண்டவர்களுக்கும் அவர்களின் தகுதிக்கேற்ப கொடுக்கப்பட்டது. மேலும் இந்தச் சிறப்பு முழுமையாகவும், நிறைவாகவும், உயர்வாகவும் நம் தலைவரும் நம் அன்பிற்குரியவரும் நம் வழிகாட்டியும், கல்விகற்காத நபியும், உண்மையானவரும், உண்மையாளர் என உறுதி செய்யப்பட்டவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடமே இருந்தது.

*(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 160-162)*

இந்த அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது என்னும் பெயருடைய (ஆயிரமாயிரம் அருள்களும் சாந்தியும் அவருக்கு உண்டாவதாக) இறைத்தூதர் எவ்வளவு உயர்வான தகுதியைக் கொண்ட இறைத்தூதர் ஆவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கின்றேன். அவருடைய உயரிய அந்தஸ்தின் எல்லையை கண்டறிய முடியாது. அவருடைய பரிசுத்தமாக்கும் தாக்கத்தைப் பற்றி அனுமானிப்பது மனிதனின் வேலையன்று. பிரித்தறியப்பட வேண்டிய முறையில் அவருடைய உயர் பதவி பிரித்தறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். உலகிலிருந்து மறைந்த அந்த ஓரிறைமையை (தவ்ஹீதை) மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தவர் அந்த வீரர் ஒருவரே! அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தில் அவர் உயிரே உருகி விட்டது. எனவே அவருடைய உள்ளத்தின் இரகசியத்தை உணர்ந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும்-முன்னவர் பின்னவர் அனைவரை விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும் அவருடைய குறிக்கோள்களை அவர் வாழ்நாளிலேயே நிறைவேற்றினான்.

*(ஹகீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 118-119)*

நம் நபி (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களின் பெயர்களையும் தம்முள் கொண்டுள்ளார். ஏனென்றால் அத்தூய தன்மையில் பல்வேறு வகையான முழுச் சிறப்புகளை ஒருங்கே கொண்டவர் ஆவார். எனவே அவர் மூஸா, ஈஸா, ஆதம், இப்ராஹீம், யூசுஃப், யஃகூப்

ஆகியோரும் ஆவார். இதனைக் குறித்தே அல்லாஹ், இவர்களின் நேர்வழியைப் பின்பற்றுங்கள் எனக் கூறினான். (திருக்குர்ஆன் 6:91 காண்க) அதாவது இறைதூதரே! எல்லா நபிமார்களும் தங்களுக்கென தனிப்பட்ட முறையில் கொண்டிருந்த பல்வேறு வகையான நேர்வழியை தம்முள் சேர்த்துக் கொள்வீராக. இதிலிருந்தும் எல்லா நபிமார்களின் தனிச் சிறப்புகளும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தனித்தன்மையில் இணைந்திருந்தன எனத் தெரிகிறது. மேலும் உண்மையில் முஹம்மது என்பதன் பொருள் அதிகமாக புகழப்பட்டவர் என்பதேயாகும். மிக அதிகமாகப் புகழப்படுவதற்கு எல்லா நபிமார்களின் வெவ்வேறான தனிச் சிறப்புகளும் குறிப்பிட்ட பண்புகளும் நபி (ஸல்) அவர்களிடம் ஒருங்கிணைந்திருத்தல் வேண்டும்.

*(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 343)*

எல்லா நபிமார்களை விடவும் முழுமையான போதனைகளை அளித்தவர், தூய்மையில் மிக உயர்ந்தவர், தத்துவ மிக்க போதனைகளை அளிப்பவர், மனித முழுமைகளின் உயர்வான முன்மாதிரியை தம் வாழ்வின் மூலம் காட்டித் தந்தவர் நம் தலைவரும், நம் நண்பருமாகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள் என்று எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

*(அர்பயீன் எண் 1 ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 345)*

நாம் நேர்மையுடன் நோக்கும்போது நுபுவ்வத் தொடர்ச்சியில் (இறைதூதர் தொடரில்) மிக உயர்

தகுதியுடைய, கண்ணியமிக்க நபியாகவும், உயிருள்ள நபியாகவும், இறைவனின் பேரன்பிற்குரிய நபியாகவும் ஒருவரையே காண்கிறோம். அவர் நபிமார்களின் தலைவரும், இறைதூதர்களில் மிகப் பெருமைக்குரியவரும் அனுப்பப்பட்ட அனைவரின் கிரீடமும் ஆகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்.

*(சிராஜே முனீர். ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 82)*

அரேபிய பாலைவனத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்ததே! அதாவது இலட்சக்கணக்கான இறந்தவர்கள் சில நாட்களில் உயிர் பெற்றனர். பல தலைமுறைகளாக கெட்டுப் போயிருந்தவர்கள் இறைபண்புகளைப் பெற்றனர். குருடர்கள் கண்ணொளி பெற்றனர். ஊமைகளின் நாவில் இறைஞானம் பெருக்கெடுத்தது. எக்கண்ணும் கண்டிராத, எக்காதும் கேட்டிராத அத்தகு புரட்சி உலகில் மலர்ந்தது. அது என்ன என்று உணர்ந்தீர்களா?

அது இறைவனில் தன்னை மாய்த்துக் கொண்ட ஒருவர் இருள் நிறைந்த இரவுகளில் செய்திட்ட துஆக்களின் பயன்களே! (துஆக்களாகிய) அவை உலகில் ஒரு பேரொலியை எழுப்பின. மேலும் அந்த கல்லாத, இயலாத, அம்மாமனிதரால் செய்ய முடியாதது என்று காணப்பட்ட அற்புதங்களை செய்து காட்டின.

அல்லாஹ்வே! அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்கள் இந்த (முஸ்லிம்) சமுதாயத்தின் மீது கொண்டிருந்த பரிவு, பற்று, கவலைக்கு ஏற்ப அருட்கொடையையும், சாந்தியையும் வழங்குவாயாக.

மேலும் உன் கருணையின் ஒளிகளை என்றென்றும் அவர்கள் மீது இறக்குவாயாக.

*(பரகாத்துத் துஆ. ரூஹானீ கஸாயின் தொகுதி 6 பக்கம் 10-11)*

ஆதமின் மக்கள் அனைவருக்கும் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர இப்போது எந்தத் தூதரும் பரிந்துரையாளரும் இல்லை. எனவே ஆற்றலும் கம்பீரமுமிக்க அந்தத் தூதரிடம் உண்மையான அன்பு கொள்ள முயலுங்கள். பிறருக்கு அவரை விட எவ்வகை பெருமையையும் கொடுக்காதீர்கள். இதனால் நீங்கள் வானில் மீட்புக்குரியவராக எழுதப்படுவீர்கள். மேலும் நினைவில் கொள்ளுங்கள். மீட்பு என்பது மரணத்திற்குப் பின்னர் நிகழ்வதன்று. மாறாக, உண்மையான மீட்பு இவ்வுலகிலேயே தன் ஒளியைக் காட்டுகிறது.

மீட்பு கிடைக்கப் பெற்றவர் யார்? இறைவன் இருக்கின்றான் என்பது உண்மை என்றும், அவனுக்கும் படைப்பினங்களுக்கும் இடையே பரிந்துரை செய்பவர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஒருவரே என்றும் வானத்தின் கீழ் அம்மாநபியை விட மேலான தகுதியினைப் பெற்றவர் வேறு எவரும் இல்லை என்றும் திருக்குர்ஆனை விட உயர்ந்த ஒரு மறைநூல் இல்லை என்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர என்றென்றும் கொள்கையாலும், கோட்பாட்டாலும் வேறெவரும் உயிர் வாழுவதை இறைவன் விரும்பவில்லை என்றும் உறுதியாக நம்புபவரே மீட்பு பெற்றவர் ஆவார்.

*(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 13-14)*

ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (நபிகள் நாயகம்) ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை உற்று நோக்கினால் அவர்கள் ஒப்பிடயியலாத தன்மை பெற்றவரும் தூய உள்ளம் உடையவரும் இறைவனுக்காக உயிரை இழக்கத் தயாராக இருந்தவரும் மக்களின் உதவி ஒத்தாசைகளை எதிர்பாராமல் இறைவனை மட்டும் நம்பி வந்தவருமாவார் என மிகத் தெளிவாக புலனாகிறது. இறைவன் மீதே அவர்கள் முழுமையாக நம்பிக்கை வைத்தார்கள். இறைவனின் விருப்பத்திற்காகவும் அவனது மகிழ்ச்சிக்காகவும் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டார்கள். ஓரிறை கொள்கையை உலகுக்கும் எடுத்துரைப்பதனால் என்னென்ன தீங்குகள் தமக்கு ஏற்படும் என்பதையும் இணை வைப்போரின் கைகளால் என்னென்ன துன்பமும் துயரமும் நேரும் என்பதையும் அவர்கள் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

*(பராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 111)*

இது ஒரு வியத்தகு நிகழ்ச்சியன்றோ! எல்லா சமுதாயங்களும் செல்வம், படை, அறிவு ஆகியவற்றில் முழுமையான ஆற்றல் பெற்றிருந்த காலத்தில் வசதியும் ஆற்றலும் இல்லாத, உதவியற்ற, எழுத்தறிவு பெறாத, பெற்றோரை இழந்த, தனித்த ஓர் ஏழை கொண்டு வந்த ஒளிமிக்க போதனை அதன் வலிய சான்றுகளாலும், தெளிவான ஆதாரங்களாலும் எதிரிகளின் வாயை அடைத்து, தத்துவ ஞானிகள் எனக் கூறித் திரிந்த பெரும் புள்ளிகள் பேரறிஞர்கள் ஆகியோரின் தவறுகளை சுட்டிக் காட்டியது.

மேலும் உதவியற்ற ஏழைகளாக இருந்தும் மன்னர்களின் அரியணைகளை வீழ்த்தி அந்த அரியணைகளில் ஏழை எளியவர்களை ஏற்றிவிடும் அளவுக்கு ஆற்றல் பெற்றிருந்தார். இது இறையுதவி இல்லை என்றால் வேறென்ன? முழு உலகையும் அறிவு, ஞானம், ஆற்றல், வலிமை ஆகியவற்றால் வென்று மேலோங்குதல் என்பது இறையுதவி இன்றி நடக்குமா?

*(பராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 119)*

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆயிரக்கணக்கான ஆபத்துகள் ஏற்பட்டும் இலட்சக்கணக்கான எதிரிகளும் பகைவர்களும் அச்சுறுத்துவோரும் இருந்தும் தங்களின் நபித்துவ வாதத்தில் இறுதி மூச்சு வரை எவ்வளவு உறுதியுடன் நிலைத்திருந்தார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். வெற்றியினைப் பற்றி முற்றிலும் நம்பிக்கை இழக்கச் செய்கின்ற சோதனைகளையும் துன்பங்களையும் நீண்ட காலம் தாங்கிக் கொண்டார்கள். அவை நாள்தோறும் வளர்ந்து வந்தன. அத்துன்பம், துயரங்களை தாங்குவதனால் உலக இன்பங்கள் கிடைக்கும் என்று எண்ணவே முடியாது. மாறாக, நுபுவ்வத் வாதத்தினால் ஏற்கனவே தமக்கு இருந்த செல்வாக்கை இழந்து விட்டார்கள். தாம் கூறிய ஒரு செய்தி மூலம் இலட்சக்கணக்கான கருத்து வேறுபாடுகளையும் ஆயிரக்கணக்கான சோதனைகளையும் ஏற்றுக் கொண்டார்கள். ஊரிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். பின்தொடர்ந்து சென்று அன்னாரைக் கொலை செய்ய முயன்றனர். வீடும், உடைமைகளும் அழித்தொழிக்கப்பட்டன.

நஞ்சும் கொடுத்தனர். அவரது நலத்தில் நாட்டம் கொண்டோர் தீமை செய்ய விரும்பினர். நண்பர்கள் பகைவர்களாயினர். நீண்ட கால துன்பங்களையும் துயரங்களையும் தாங்கி வெற்றி பெறுவது ஒரு பொய்யரால் இயலாது.

***(பாராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 108-109)***

*இறைவா! முஹம்மத் முஸ்தஃபா மீது உன் எல்லையில்லா*
*அருளும் கருணையும் உண்டாவதாக. இறைவா! உன்*
*ஒளியினை நாம் அவரிடமிருந்து பெற்றோம்.*

*என் ஆன்மா முஹம்மதின் ஆன்மாவுடன் என்றென்றுமாக*
*இறுக்கப் பிணைந்துள்ளது அவரது அன்பார்ந்த நீரை*
*என்னுள்ளம் நிரம்பப் பருகச் செய்தோம்.*

*உலகில் அவரை விட சிறந்தவர் வேறு யாரையும் நாம்*
*கண்டதில்லை. நிச்சயமாக நாம் மற்றவரிடமிருந்து நம்*
*உள்ளத்தை விடுவித்தோம்.*

*உமது பண்பில் இறைவனின் மகத்துவம் தென்படுகிறது.*
*உம்மை அடைந்ததனாலேயே நாம் அவனை*
*அடைந்தோம்.*
*உம் ஆடையின் விளிம்பைத் தொட்டதனால் எல்லா*
*மாயையிலிருந்தும் விடுதலை கிடைக்கிறது. நிச்சயமாக*
*உமது வாசலில் நாம் சிரம் பணிகிறோம்.*

*உள்ளத்தில் நிறைந்திருப்பவனே! உன் ஏகத்துவத்தின் மீது ஆணையாக! உன்னைப் பற்றிய அன்பில் நாம் நம்மை மறந்து விட்டோம்.*

*இறைவன் மீது ஆணையாக! உன்னைப் பற்றிய நினைவை உள்ளத்தில் நிலைநாட்டியதிலிருந்து மற்ற அனைவரைப் பற்றிய நினைவும் அழிந்து விட்டன.*
*இறைதூதர்களில் சிறந்தவரே! உம் மூலமாகவே நாம் சிறந்த சமுதாயமாக ஆனோம். நீர் காலை முன்னெடுத்து வைத்ததனால்தான் நாம் காலை முன்னெடுத்து வைத்தோம்.*

*மனிதர்கள் என்ன! வானவர்களும் நாம் உம்மைப் புகழ்ந்து பாடியதைத்தான் பாடுகின்றனர்*

***(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 225-226)***

**நம் தலைவரும், எஜமானரும் நபிமார்களில் பெருமைக்குரியவரும், மக்களில் சிறந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் வழிகளைப் பின்பற்றாதிருந்தால் இந்த அருட்கொடையைப் பெறுவது எனக்கு சாத்தியமில்லாதிருந்தது. நான் பெற்றதெல்லாம் அவரைப் பின்பற்றியதால் பெற்றேன். மேலும் அந்த நபி (ஸல்) அவர்களை பின்பற்றாமல் எந்த மனிதனும் இறைவன் வரை சென்றடைய முடியாது என நான் எனது உண்மையான, முழுமையான ஞானத்தால் அறிகிறேன். இன்னொன்றையும் நான் இங்கே கூறுகிறேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை**

**உண்மையான, முழுமையான முறையில் பின்பற்றிய பின்னர் உள்ளத்திலிருந்து உலகப் பற்று வெளியேறி இதயம் நிலையான, என்றும் அழியாத ஓர் இன்பத்தை தேட ஆரம்பிக்கிறது. இதன் பின்னர் அந்த கல்பே சலீம் காரணமாக தூயதும் முழுமையானதுமான இறை நேசம் கிடைக்கிறது. இந்த அருள் அனைத்தும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதனால் பரம்பரை சொத்தாகக் கிடைக்கிறது.**

***(ஹக்கீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 64-65)***

*ஒளிகளின் பிறப்பிடம் அவரே! அவரே எமது தலைவர்*
*அவரது பெயர் முஹம்மது எம் உள்ளம் கவர்ந்தவர் அவரே*

*தூதர் எல்லாரும் தூயவரே! ஒருவர் மற்றவரில் சிறந்தவரே!*
*ஆனால் இறைதூதருள் உயர்ந்தவர் படைப்பினத்தில்*
*தலைசிறந்தவர் அவரே!*

*சென்றோருள் சிறந்தவர்; சிறப்பிற்கொரு சந்திரன்; எல்லா*
*நோக்கும் அவரிடத்தே! காரிருளில் அவர் வெண்ணிலவு!*

*முன் சென்றவர் எல்லாம் இடைவழியில் நின்றவரே!*
*முன்னவர் ஒருவரே முழு வழி கடந்தவர். என் உயிர்*
*அவருக்கு அர்ப்பணம் அன்னவரே நமது தலைவர்*

*பரந்து விரிந்த உள்ளத்தில் புகுந்து வாழும் இறையோனை*
*காட்டித் தந்த வழிகாட்டி*

*மார்க்கங்களுக்கு இன்று மன்னவர் தூதர்களுக்கெல்லாம்*
*மணிமகுடம் அவர் தூயவர் நம்பிக்கைக்கு உரியவர்*
*இதுவே அன்னவரின் புகழும் துதியுமாகும்*

*அவர் நீண்ட தொலை நோக்கினார் இதயத்தால்*
*இறைவனை நெருங்கியவர் அவர் கையில் மார்க்கத்தின்*
*ஒளி விளக்கு எல்லா ஒளிகளின் உறைவிடம் அவரே*

*மார்க்கத்தின் மறை ஞானங்களை விளக்கியவர் ஆன்மீக*
*கருவூலங்களை வாரி வழங்கிய பெரும் புகழ் படைத்த பேரரசர்*

*அந்த ஒளிக்கு எல்லாம் அர்ப்பணம் நான் அவருடையதாக*
*இருக்கிறேன் அவர்தான் எல்லாம்; நான் எதுவுமல்லன்.*
*இதுவே இறுதித் தீர்ப்பு*

***(காதியான் கே ஆர்யா அவ்ர் ஹம். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 456)***

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஆற்றல் மற்றும் பெருமை பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் தாவூது (அலை) அவர்கள் சங்கீதம் அத்தியாயம் 45-ல் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்: எல்லா மனிதருள்ளும் நீர் அழகானவர்; உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது. ஆகையால் இறைவன் உம்மை என்றென்றும் ஆசீர்வதிக்கிறார். வல்லமை மிக்கவரே! உம் மகிமையும் உம் மகத்துவமுமாகிய உம் வாளை நீர் உம்முடைய அரையியே கட்டிக் கொண்டு, உண்மையின் பொருட்டும் நீதியுடன் கூடிய சாந்தத்தின் நிமித்தமும் உம் மகத்துவத்திலே

வெற்றியுடன் ஏறி வருக. உமது வலக்கரம் பயங்கரமான வேலைகளை விளங்கச் செய்யும்.

*(சுர்மயே சஷ்மே ஆர்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 281-282)*

## 5. திருக்குர்ஆன்

திருக்குர்ஆன் ஓர் இரத்தினப் பேழையாகும். ஆனால் மிகக் குறைந்தவர்களே இதனை உணர்ந்தவராவர்.

*(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 344)*

திருக்குர்ஆனின் உயர் தகுதி மற்றெல்லாத் தகுதிகளையும் விட மேலானது. அது ஹகம் ஆகும். அதாவது தீர்ப்பு வழங்கக் கூடியது. அது முஹைமின் ஆகும். அதாவது எல்லா நேர்வழிகளையும் தன்னகத்தே கொண்டது. அது எல்லாச் சான்றுகளையும் ஒருங்கே கொண்டுள்ளது. எதிரிகளின் ஒற்றுமையை சின்னா பின்னமாக்கி விட்டது. எல்லாப் பொருள்களின் விளக்கங்களையும் தன்னகத்தே கொண்டது இந்த நூல். அதனுள் முன்பின் உள்ள செய்திகள் எல்லாம் அடங்கி இருக்கின்றன. பொய்களால் முன்னிருந்தோ, பின்னிருந்தோ அதனை அணுக முடியாது. அது இறைவனின் ஒளியாகும்.

*(குத்பா இல்ஹாமிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 16 பக்கம் 103)*

திருக்குர்ஆனின் மிகத் தெளிவான அற்புதங்கள் அதன் எல்லையற்ற இறைஞானமும் உண்மைகளும் தத்துவமிக்க ஞானங்களும் ஆகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இவை

எல்லா சமுதாயங்களாலும் எல்லா மொழியினராலும் விளங்கக் கூடியதாகும். இதன் மூலம் எல்லா நாட்டினரையும் - அவர் இந்தியரோ பாரசீகரோ ஐரோப்பியரோ அமெரிக்கரோ அல்லது வேறு எந்த நாட்டைச் சார்ந்தவரோ ஆக இருப்பினும் அவர்களை நாம் குற்றவாளியாக்கி, வாயடைக்கச் செய்து, முற்றிலும் பதில் கூற முடியாதவராக்கி விட முடியும். அவை எல்லாக் காலத்தும் காலத்திற்கேற்ப வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அவை எல்லாக் காலங்களின் பிரச்சனைகளுக்கும் எதிரில் போர்க்கோலம் பூண்ட வீரர்களாக விளங்குகின்றன. திருக்குர்ஆன் தன்னகத்தே கொண்டுள்ள உண்மைகள் நுட்பங்களைப் பொருத்தவரை எல்லைக்கு உட்பட்டவையாக இருந்திருந்தால் அது முழுமையான அற்புதமாக ஒருபோதும் விளங்கியிருக்காது.

*(இஸாலயே அவ்ஹாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 255-256)*

திருக்குர்ஆனைப் போன்ற ஓர் அற்புதம் இதற்கு முன் இருந்ததில்லை. இனிமேலும் வரப்போவதுமில்லை. அதன் அருள், வளம் ஆகியவை என்றென்றும் நீடித்திருக்கக் கூடியவையாகும். அது நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்தது போன்று எக்காலமும் தெளிவாக ஒளிவிட்டு விளங்கக் கூடியதாகும். இன்னும் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரின் கூற்றும் அவரது தகுதிக்கேற்பவே இருக்கும். அவருடைய துணிவும் உறுதியும் உயர்வான குறிக்கோளும் இருக்கும் அளவுக்கு ஏற்ப அவரது பேச்சும் அமைந்திருக்கும். இறை அறிவிப்பின் (வஹியின்) நிலையும் இது போன்றதேயாகும். இறையறிவிப்பு கிடைக்கப் பெறுபவர் கொண்டிருக்கும் உயர் தகுதிக்கு ஏற்பவே வஹி அவருக்குக் கிடைக்கிறது. எனவே நபி (ஸல்) அவர்களுக்கு

கிடைத்துள்ள வஹி மிக உயர்தரமானது. அந்தத் தகுதியும் துணிவும் உடையவர் ஒருவர் இனிமேல் பிறக்க மாட்டார்.

*(மல்ஃபூஸாத். தொகுதி 3 பக்கம் 57)*

நாம் உண்மையையே கூறுகிறோம். அதைக் கூறாமல் இருக்க இயலாது. நபிபெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றாமலும், நமது பெரியோர்களாலும் ஆன்மீக தலைவர்களாலும் கண்டுணர்ந்த - நாம் இன்று கண்டு கொண்டிருக்கின்ற பெருஞ் செல்வமான திருக்குர்ஆன் அருளப்படாமலும் இருந்திருந்தால் பைபிள் கூறுகின்றவற்றிலிருந்து மட்டும் மூஸா நபி (அலை) அவர்களையும், ஈஸா நபி (அலை) அவர்களையும் இன்னும் கடந்த கால இறைதூதர்கள் அனைவரையும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தூதுவர்களாக கருதுவது மிகக் கடினமாக இருந்திருக்கும். திருக்குர்ஆனின் இந்த ஆன்மீக உதவியை நாம் நிச்சயமாக ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அது தனது ஒளியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெளிப்படுத்தியுள்ளது. இந்த முழுமைபெற்ற ஒளியின் உதவியால் கடந்த கால இறைதூதர்களின் உண்மைகளை நம்மால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இந்த உபகாரம் நமக்கு மட்டும் காட்டப்பட்டதன்று. மாறாக, ஆதம் நபி முதல் ஈஸா நபி வரை திருக்குர்ஆன் தோன்றுவதற்கு முன் தோன்றிய எல்லா இறைதூதர்களுக்கும் காட்டப்பட்டதாகும்.

*(பராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 290)*

இன்று உலகில் இறைநூல்கள் எனக் கூறப்படுபவற்றுள் தான் உறுதியான சான்றுகளால் இறைவசனம் என நிரூபிக்கப்பட்டுள்ளது திருக்குர் ஆன் ஒன்றேயாகும். மீட்பு பற்றிய அதன் கொள்கை முற்றிலும் நேர்மையானதாகவும் மனித இயல்புக்கு இயைந்ததாகவும் அமைந்துள்ளது. அது எடுத்தியம்பும் கொள்கைகள் மறுக்க இயலாத, பலமிக்க சான்றுகளால் நிறைவானவையாகவும், உறுதியானவையாகவும் நிலைநாட்டப்படுகின்றன.

அதன் கட்டளைகள் முற்றிலும் உண்மையை அடிப்படையாகக் கொண்டவையாகும். அதன் போதனைகள் எல்லாவகையான இணைவைத்தல், புதியன புகுதல், படைப்பின வழிபாடு ஆகிய கலப்படங்களிலிருந்து முற்றிலும் தூய்மையானவையாகும். அது ஓரிறைக்கொள்கை, இறைவனின் உண்மையான மதிப்பு மற்றும் இறைவனின் முழுமையானதன்மைகளை வெளிப்படுத்துவதற்கான எல்லையற்ற ஆர்வத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. அதில் இறைவனின் தனித்தன்மை நிரம்பியுள்ளது. இறைவனின் தூய தன்மைக்கு எவ்வகையான கறையையும் குறையையும் களங்கத்தையும் அது கற்பிப்பதில்லை. எந்தக் கொள்கையையும் ஏற்கும்படி கட்டாயப்படுத்துவதில்லை. மாறாக, ஒவ்வொரு போதனையுடனும் அதன் உண்மையையும் காரணங்களையும் எடுத்துக் கூறுகிறது. ஒவ்வொரு நோக்கங்களையும் வாதங்களையும் சான்றுகளுடனும் ஆதாரங்களுடனும் நிரூபிக்கின்றது. ஒவ்வொரு கொள்கையின் உண்மைக்கும் தெளிவான சான்றுகள் வழங்கி உறுதியின் தகுதியை முழுமைப் படுத்தி,

இறைஞானத்தின் எல்லையை எட்ட வைக்கிறது. மக்களின் கொள்கை, செயல்கள், கூற்று, பழக்கங்கள் ஆகியவற்றில் ஏற்பட்டிருக்கும் எல்லா வகையான குறைபாடுகளையும் தூய்மையின்மையையும் ஒழுங்கீனங்களையும் குழப்பங்களையும் தெளிவான சான்றுகளுடன் நீக்குகிறது. மேலும் மனிதனிடம் மனிதத்தன்மைகளை வளர்ப்பதற்குத் தேவையான எல்லாப் பண்புகளையும் கற்றுத் தருகிறது. இன்றைய நாளில் குழப்பங்கள் எத்துணை வேகத்துடன் பரவுகிறதோ அத்துணை வேகத்துடன் அவற்றை எதிர்க்கிறது. அதன் போதனைகள் மிகவும் நேர்மையானவையும் வலுவானவையும் மிகவும் நிறைவானவையும் ஆகும். எவ்வாறெனில், அவை இயற்கையை பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். அது இயற்கைச் சட்டத்தின் மறு வடிவமாகும். அகப்பார்வைக்கும் உள்ளொளிக்கும் ஒளிவிடும் சூரியனாக அது விளங்குகிறது.

*(பராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 81-82)*

*எல்லா ஒளிகளையும் விட அதிக ஒளிமிக்கதாக*
*திருக்குர்ஆனின் ஒளியே விளங்கியது எதிலிருந்து*
*ஒளிகளின் நதி வெளியானதோ அது தூயதாகும்*

*தவ்ஹீதின் செடி காய்ந்து கொண்டிருந்தது.*
*மறைவிலிருந்து இந்த தூய நீரூற்று வெளிப்பட்டது*

*இறைவா! உனது குர்ஆன் ஓர் உலகமாகும்*
*தேவையானவை அனைத்தும் இதில் காணக்கிடைக்கின்றன*

*முழு உலகையும் எல்லா கடைவீதிகளையும் கண்டு விட்டோம் இறைஞானத்தின் மதுவுக்கு இது ஒன்றே கோப்பையாக அமைந்தது*

*இந்த ஒளிக்கு உலகில் என்ன ஒப்புமை இருக்க முடியும்? அது எல்லாவற்றிலும், எல்லா பண்பிலும் தனிச்சிறப்பானதாக விளங்கியது*

*முதலில் நாம் திருக்குர்ஆனை மூஸாவின் கைத்தடி என்ற அளவுக்கு மட்டுமே கருதினோம். பின்னர் சிந்தித்தபோது குர்ஆனின் ஒவ்வொரு சொல்லும் அற்புதமாகத் தென்பட்டது*

*இதன் ஒளியை பார்க்காதது குருடர்களின் குறையேயாகும் மற்றபடி அது  ஒளிவீசும் வாளைப் போன்று பிரகாசித்தது.*

*இது இருந்தும் எவர்களின் உள்ளங்கள் குருடாக இருக்கின்றனவோ அவர்களின் வாழ்வு இவ்வுலகில் என்ன மண்ணானதாகும்!*

***(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 3 அடிக்குறிப்பின் கீழ் அடிக்குறிப்பு. ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 305-306)***

*அன்பர்களே கேளுங்கள்! குர்ஆன் இன்றி மனிதன் உண்மையைப் பெற முடியாது*

*அது, இதயத்தில் என்றும் ஒளி நிரப்புகிறது. உள்ளத்தை நன்றே தூயதாக்குகிறது*

*அதன் சிறப்புகளை எப்படி எடுத்துரைப்பேன்! அது இவ்வுயிருக்கே இன்னோர் உயிரூட்டுகிறது.*

*அதோ பாருங்கள்! பெருஞ் சூரியனைப் போன்று அது ஒளி*
*வீசிப் பிரகாசிக்கிறது அதனை எவ்வாறு மறுக்க முடியும்?*

*அதன் சொல்லெல்லாம் ஞானக் கடலே! அது*
*இறையன்பின் பானத்தை அருந்த வைக்கிறது*

*துன்புறுவோருக்கு அது ஒன்றே மருந்து இறைவனைக்*
*காட்டுவதற்கு இறைவனிடமிருந்து வந்தது அது ஒன்றே!*

*நாம் கண்ட வழிகாட்டும் சூரியன் அது ஒன்றே.*
*உள்ளத்தைக் கவரக் கூடியதே*

*நாம் கண்டது அது ஒன்றே. மறுப்போர் கூறும்*
*கூற்றெல்லாம் மடமையன்றி வேறில்லை.*

***(பராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 299-300)***

## 6. வஹீ மற்றும் இல்ஹாம் (இறையறிவிப்புகள்)

இறைவன் தன் அடியார் ஒருவருக்கு அவருடைய வேண்டுதல்களுக்குப் பிறகோ அல்லது தானாகவோ மறைவான ஒன்றை அறிவிக்க நாடினால் தன் அடியாருக்கு உணர்வற்ற மயக்க நிலையை ஒருகணம் ஏற்படுத்துகிறான். அதனால் அவர் தன்னை முற்றிலும் இழந்து விடுகிறார். ஒருவர் நீரில் மூழ்கி, கீழ் நோக்கிச் செல்வது போன்று விழிப்புணர்வற்ற மயக்க நிலையில் அந்த அடியாரும் மூழ்கி விடுகிறார். நீரில் கீழ் நோக்கி நீந்துவதற்கு முற்றிலும் ஒப்பான இந்த மயக்க நிலையிலிருந்து அந்த அடியார் வெளிவரும்போது தன்னுள் ஏதோ எதிரொலிப்பது போன்று உணர்கின்றார். அந்த எதிரொலி மங்கும்போது அவர் தன்னுள் மிக இனிய, பொருத்தமான, நேர்த்தியான உரையாடலை உணர்கின்றார். இந்த மயக்க நிலையில் மூழ்குவது என்பது மிக அற்புதமான ஒன்றாகும். அதன் அற்புதங்களை எடுத்துரைப்பதற்கு சொற்கள் இல்லை. இதே நிலையில்தான் இறைஞானத்தின் ஓர் ஆறு மனிதனுள் பாய்கிறது. ஏனெனில் தொடர்ந்து வேண்டுதல் செய்யும்போது மயக்கத்தில் மூழ்கும் நிலையை அல்லாஹ் தன்னிடமிருந்து அடியாருக்கு வழங்கி அடியாரின் எல்லா வேண்டுதல்களுக்கும் இனிய, நுண்ணிய உரையாடல் மூலம் பதிலளிக்கின்றான். ஒவ்வொரு வேண்டுதலின்போதும் மனித ஆற்றலுக்குப் புலப்படாத உண்மைகள் அவருக்குப் புலப்படுகின்றன. எனவே இது அவனுக்கு இறைஞானம் வளர்வதற்கும், முழுமை பெறுவதற்கும் காரணமாக அமைக்கிறது. மனிதனின் இறைஞ்சுதலும் இறைவன் தன் இறைமையின் தோற்றத்தின் மூலம் அவன் வேண்டுதல்களுக்கு பதில் அளிப்பதும் இவ்வுலகிலேயே அடியார்

இறைவனைக் காண்பதாகும். மேலும் அவருக்கு ஈருலகங்களும் எந்த வேற்றுமையுமின்றி ஒன்றாகி விடுகிறது.

*(பராஹீனே அஹ்மதிய்யா. அடிக்குறிப்பின் கீழ் அடிக்குறிப்பு. ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 260- 262)*

இறையறிவிப்பின் ஐந்தாவது வகை எத்தகையது என்றால், அதற்கு மனித உள்ளத்துடன் எந்தத் தொடர்பும் இருக்காது. மாறாக, வெளியிலிருந்து ஒலி ஒன்று வருகிறது. அந்த ஒலி ஒருவன் திரைக்குப் பின்னாலிருந்து பேசுவது போன்று தெரிகிறது. ஆனால் அந்த ஒலி மிகவும் இனியதாகவும், மகிழ்ச்சி மிக்கதாகவும் ஓரளவு விரைவுடனும் இருக்கும். அதனால் உள்ளத்தில் ஓர் இன்பம் ஏற்படுகிறது. மனிதன் ஏதாவதொன்றில் மூழ்கியிருக்கும்போது திடீரென அந்த ஒலி வருகிறது. அந்த ஒலியைக் கேட்பவன் இது எங்கிருந்து வருகிறது? யார் தன்னுடன் பேசுவது? என்று வியப்படைக்கின்றான். அவன் வியப்பிற்கு உள்ளானவன் போன்று முன்னும் பின்னும் பார்க்கிறான். பொதுவாக வெளியிலிருந்து வரும் இந்த ஒலி மனிதன் ஏதாவதொரு பிரச்சனை குறித்து மிக ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும்போது நற்செய்தியாக வருகிறது.

*(பராஹீனே அஹ்மதிய்யா அடிக்குறிப்பின் கீழ் அடிக்குறிப்பு. ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 287)*

ஒளியை அருள்வதிலும் அவனுடைய சட்டம் என்னவெனில், சிறிதளவு ஒளியைக் கொண்டிருப்பவருக்கே மேலும் ஒளி வழங்கப்படுகிறது. எதுவும் இல்லாத ஒருவருக்கு எதுவும் கொடுக்கப்படுவதில்லை. கண்ணொளி உள்ளவரே சூரிய ஒளியைக் காண முடியும். கண்ணொளி பெறாதவர் சூரிய ஒளியை அறியாதவராக இருக்கிறார். இயல்பிலேயே

குறைந்த ஒளியுடையவருக்கு பிற ஒளியும் குறைவாகவே கிடைக்கும். மேலும் இயல்பிலேயே மிகுதியான ஒளி பெற்றவருக்கு பிற ஒளியும் மிகுதியாகவே கிடைக்கிறது.

*(பராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 195-196)*

இறைவன் தன் வியத்தகு உலகங்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளான். ஒன்று, கண்கள், காதுகள், ஏனைய வெளிப்புலன்கள் மூலமாகவும் வெளிக் கருவிகளை ஊடகமாகக் கொண்டும் உணரக் கூடிய வெளியுலகம். இரண்டு, பகுத்தறிவினாலும் அனுமானங்களாலும் உணரக் கூடிய உள் உலகம். மூன்றாவது, மிக நுட்பமானதும், உணர முடியாததும் எண்ணங்களுக்கு அப்பாற்பட்டதுமாகிய உள் உலகத்திற்கும் அப்பாற்பட்ட ஓர் உலகம். அதனை அறிந்தவர் மிகக் குறைந்தவர்களேயாவர். அது முற்றிலும் மறைவான உலகம். அதை உணர்வதற்காக யூகத்தை தவிர வேறு ஆற்றல் மூளைக்குக் கொடுக்கப்படவில்லை. ஆன்மீகக் காட்சி, வஹீ, இல்ஹாம் ஆகிய இறையறிவிப்புகள் மூலமாகவே அந்த உலகத்தைப் பற்றி அறிய முடியுமே அன்றி வேறு எந்த முறையிலும் அறிய முடியாது. மேலே குறிப்பிட்ட முதல் இரண்டு உலகங்கள் பற்றியும் ஆராய்வதற்கு மனிதனுக்கு உணர்வுகளும், ஆற்றல்களும் அளிக்கப்பட்டுள்ளன என்பது நமக்குப் புலனாகும் இறைவனது செயல் முறையாகும். அவ்வாறே இந்த மூன்றாவது உலகினை அறிவதற்காக அருள்மிக்க இறைவன், மனிதனுக்கு ஒரு வழியினை ஏற்படுத்தி இருக்கிறான். அந்த வழி வஹீ, இல்ஹாம் என்னும் இறையறிவிப்புகளும்

ஆன்மீகக் காட்சிகளும் ஆகும். அது ஒரு நாளும் முற்றிலும் நின்று விடுவதில்லை. மாறாக, அதற்குரிய தகுதியுடையவர்கள் அதை என்றும் பெற்றனர்; என்றும் பெறுவர்.

*(சுர்மயே சஷ்மே ஆர்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 127-128)*

## 7. நம் கோட்பாடுகள்

நம் மார்க்கத்தின் சாரம் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதாகும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமில்லை. முஹம்மது அவனுடைய தூதர் ஆவார். இவ்வுலக வாழ்வில் நாம் கொண்டுள்ளதும் இவ்வுலகிலிருந்து நாம் பிரியும் வரை இறையருளால் நம்முடன் இருப்பதுமான கொள்கை என்னவெனில், நமது ஆன்மீகத் தலைவரும், எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீனும் (நபிமார்களில் சிறந்தவரும்), கைருல் முர்ஸலீனும் (இறைதூதர்களில் மேலானவரும்) ஆவார்கள். அவர்களின் கையால் மார்க்கம் முழுமை பெற்று விட்டது. அருட்கொடைகளின் தகுதிகள் நிறைவடைந்து விட்டன. அவர்களின் மூலமாக மனிதன் நேர்வழியைத் தேர்ந்தெடுத்து இறைவனை அடைய முடியும். மேலும் திருக்குர்ஆன் இறைநூல்களில் முழுமையானது என மிக உறுதியாக நம்புகிறோம். அந்த நூலின் சுழியோ, புள்ளியோ, சட்டங்களோ, கட்டளைகளோ, ஆணைகளோ, போதனைகளோ கூடவோ குறையவோ செய்யாது. இனிமேல் திருக்குர்ஆனின்

போதனைகளை மாற்றவோ, நீக்கவோ கூடிய அல்லது ஏதாவதொரு கட்டளையை மாற்றவோ திருத்தவோ கூடிய எந்த இல்ஹாமோ வஹியோ வர முடியாது. எவராவது அவ்வாறு நினைப்பாரென்றால் எம்மைப் பொருத்தரை அவர் நம்பிக்கையாளர்களின் கூட்டத்திலிருந்து வெளியேறியவரும் மறுப்போரும் மார்க்கமிழந்தோரும் ஆவார்.

*(இஸாலயே அவ்ஹாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 169-170)*

அல்லாஹ்வைத் தவிர வணக்கக்திற்குரியவன் எவனுமே இல்லை என்றும் செய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் அவனுடைய தூதரும் காத்தமுல் அன்பியாவும் ஆவார்கள் என்றும் நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம். அல்லாஹ் திருக்குர்ஆனில் குறிப்பிடும் அனைத்தையும் நம்புகிறோம். இஸ்லாமிய ஷரீஅத்திலிருந்து ஒரு கடுகளவு அதிகப்படுத்தவோ, குறைக்கவோ அல்லது அதன் கட்டளைகளை கைவிடவோ துன்மார்க்கத்திற்கான அடித்தளம் இடவோ செய்கின்றவர் ஈமான் இல்லாதவரும் இஸ்லாத்திற்கு அப்பாற்பட்டவரும் ஆவார்.

நாம் நமது ஜமாஅத்திடம் போதிப்பது என்னவென்றால், அவர்கள் உளப்பூர்வமாக லாயிலாக இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற கலிமா மீது ஈமான் கொண்டு அதிலேயே நிலைத்து அதிலேயே மரணிக்க வேண்டும். மேலும் திருக்குர்ஆனிலிருந்து தெரியவரும் எல்லா நபிமார்களின் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதாகும். அடுத்து, அவர்கள் தொழுகை, நோன்பு, ஸகாத்து, ஹஜ் ஆகியவற்றை கடைபிடிக்க

வேண்டும். அத்துடன் அல்லாஹ்வும் அவனுடைய தூதர் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ள கட்டளைகளையும் கடமைகளாகக் கொண்டு அவற்றை நிறைவேற்றி வர வேண்டும் என்பதுமாகும். சுருக்கமாகக் கூறுவதென்றால், எந்த கொள்கைகளை சலஃபுஸ் ஸாலிஹ்கள் (முன் சென்ற சான்றோர்கள்) ஒருமனதாக ஏற்றிருந்தார்களோ எந்த கொள்கைகள் அஹ்லே சுன்னத்தின் ஒருமனதான கருத்தில் இஸ்லாம் எனக் கொள்ளப்படுகிறதோ அவற்றின் மீது நம்பிக்கை கொள்வது கடமையாகும். இதுவே எங்களின் மார்க்கம் என்பதை வானத்தையும் பூமியையும் சாட்சியாகக் கொண்டு நான் கூறுகிறேன்.

*(அய்யாமுஸ் சுலஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 323)*

பூமியில் வாழும் மனித இனமே! மேற்கிலும் கிழக்கிலும் வாழும் ஆன்மாக்களே!! நான் மிக அழுத்தமாக இதன் பக்கம் அழைக்கிறேன். அதாவது இப்போது பூமியில் உண்மையான நெறி இஸ்லாம் மட்டுமேயாகும். திருக்குர்ஆன் கூறும் இறைவனே உண்மையான இறைவன் ஆவான். நிலையான ஆன்மீக வாழ்வைக் கொண்ட இறைத்தூதர், ஆற்றல் மற்றும் தூய்மை ஆகியவற்றின் அரியணையில் அமர்ந்திருக்கும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள்.

*(திர்யாக்குல் குலூப். ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 141)*

## 8. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்தஸ்து

அந்த நாட்களில் ஒரு கனவு கண்டேன். மக்கள் புத்துயிர் அளிக்கும் ஒருவரை தேடி அலைகின்றனர். ஒருவர் என் முன்னால் வந்து என்னைச்சுட்டிக்காட்டி, 'அல்லாஹ்வின் தூதரை நேசிப்பவர் இவரே' எனக் கூறினார். அதாவது ரஸூலுல்லாஹ்வுடன் அன்பு கொண்ட ஒருவரே மக்களை சீர்திருத்தும் தகுதி பெற்றவர் என்பது அவர்களின் கருத்தாகும். அவர்களின் கண்ணோட்டதில் நானே அந்த நிபந்தனைக்கேற்றவனாக இருந்தேன்.

*(பராஹீனே அஹ்மதிய்யா ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 598)*

உலகு என்னை ஏற்காது. ஏனெனில் நான் இவ்வுலகைச் சார்ந்தவன் இல்லை. ஆனால் மறுமையின் பங்கு கிடைக்கப் பெற்ற இயல்புடையவர்கள் என்னை ஏற்கின்றனர்; ஏற்பார்கள். என்னைப் புறக்கணின்றவர் என்னை அனுப்பியவனைப் புறக்கணிக்கின்றார். என்னோடு தொடர்பு கொண்டவர் நான் யாரிடமிருந்து வந்தேனோ அவனுடன் தொடர்பு கொண்டவர் ஆவார்.

என் கையில் ஒரு தீபம் உள்ளது. என்னிடம் வருபவர் அந்த ஒளியிலிருந்து நிச்சயம் ஒளி பெறுவார். ஆனால் தவறான எண்ணத்தாலும் தீய யூகத்தாலும் விலகி ஓடுபவர் இருளில் எறியப்படுவார். இக்காலத்தில் உறுதி வாய்ந்த

கோட்டை நானே! என்னுள் நுழைபவர் திருடர், கொள்ளையர், கொடிய விலங்கு ஆகியவர்களிடமிருந்து தன் உயிரைக் காத்துக் கொள்வார்.

*(இஸ்லாத்தின் வெற்றி. ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 34)*

என் உயிரை தன் கையில் வைத்துள்ள அந்த இறைவன் மீது ஆணையாக! திருக்குர்ஆனின் உண்மைகளையும் ஆழிய ஞானத்தையும் புரிவதில் எல்லா ஆன்மாக்களை விட எனக்கு வெற்றி கிடைத்துள்ளது. மேலும் எந்த எதிரி மவ்லவியாவது திருக்குர்ஆனுக்கு விளக்கம் எழுதுவதற்காக நான் அவர்களை மீண்டும் மீண்டும் அழைத்திருந்தும் எனக்கெதிராக நின்றிருந்தால் அல்லாஹ் அவரை இழிவிற்குள்ளாக்கி வெட்கத்திற்குள்ளாக்கி இருப்பான். எனவே எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் திருக்குர்ஆன் ஞானம் மேன்மை மிக்க அல்லாஹ்வின் ஓர் அடையாளமாகும். நான் இக்கூற்றில் உண்மையாளன் என்பதை விரைவில் உலகம் உணரும் என்று இறையருளால் நான் நம்புகிறேன்.

*(சிராஜே முனீர். ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 41)*

நான் தனித்தவன் அல்லன். கண்ணியத்திற்குரிய இறைவன் என்னுடன் இருக்கிறான். அவனை விட நெருங்கியவர் எனக்கு வேறு எவரும் இல்லை. துன்பங்களை சகித்தும் அவன் மார்க்கத்திற்கு தொண்டு செய்ய வேண்டும்; இஸ்லாத்தின் திட்டங்களை மிகுந்த ஆர்வத்துடனும் உண்மையுடனும் முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்ற எழுச்சி மிக்க ஆவி அவன் அருளினால் எனக்கு கிடைத்துள்ளது. அவனே இப்பணியில் என்னை

அமர்த்தியுள்ளான். எவரின் பேச்சைக் கேட்டும் நான் இதிலிருந்து பின்வாங்க மாட்டேன்.

*(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 35)*

இறையச்சமுடைய ஒருவருக்கு இதுவே போதுமானது. அதாவது இட்டுக்கட்டுபவர்களை (செய்வது) போன்று இறைவன் என்னை அழிக்கவில்லை. மாறாக, என் புறத்திலும் அகத்திலும் உடலிலும் ஆன்மாவிலும் என்னால் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு அருள் புரிந்துள்ளான். இறைவனின் வஹியும் இல்ஹாமும் எனக்கு கிடைத்ததாக வாதிட்டபோது நான் இளைஞனாக இருந்தேன். தற்போது முதியவனாகி விட்டேன். நான் வாதிக்கத் தொடங்கி 20 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. என்னை விட இளைய நண்பர்கள் பலர் இறந்து விட்டனர். எனக்கு அவன் நீண்ட ஆயுளை அளித்துள்ளான். மேலும் எல்லா சிக்கல்களின்போதும் அவன் எனக்குப் பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருந்தான். எனவே இறைவன் மீது இட்டுக்கட்டிக் கூறுபவரின் நிலை இதுவா என்ன?

*(அஞ்சாமே ஆத்தம். ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 50)*

## 9. தூய ஜமாஅத்தை நிலைநாட்டுவதும் அறிவுரைகளும்

என்னுடன் உள்ள பைஅத் உடன்படிக்கையில் இணைந்து கொண்ட எனது நண்பர்களே! அவன் திருப்தி கொள்ளும் செயல்களைச் செய்யும் பேற்றினை இறைவன் எமக்கும் உங்களுக்கும் தந்தருள்வானாக. இன்று நீங்கள் சிறுபான்மையினராக இருக்கிறீர்கள். ஏளனத்துடன் நீங்கள் பார்க்கப்படுகின்றீர்கள். தொன்று தொட்டு இயங்கி வரும் இறை செயல்முறைக்கேற்ப இன்னுமொரு சோதனைக் காலம் உங்களுக்கு வர இருக்கிறது. உங்களை தடுமாற வைக்க ஒவ்வொரு திசையிலிருந்தும் முயற்சிகள் நடைபெறும். எல்லா முறையிலும் தொல்லைக்கு ஆளாவீர்கள். பல்வேறு வசைமாரிகளைக் கேட்க நேரும். நாவாலோ, கையாலோ உங்களுக்கு துன்பமிழைப்பவன் இஸ்லாமிய தொண்டாக அதனைக் கருதுவான். எல்லா வகையிலும் சோதிக்கப்பட விண்ணிலிருந்தும் சில சோதனைகள் உங்களுக்கு வரும்.

எனவே இப்போது கேளுங்கள். உங்களின் வெற்றிக்கும் முன்னேற்றத்திற்கும் உரிய வழி உங்களின் வறட்டு வாதத் திறமையோ, கிண்டலுக்குப் பதிலாக கிண்டலோ, எச்சுக்கு எதிராக ஏசுவதோ அல்ல. ஏனெனில் நீங்களும் இவ்வழிகளை கைக்கொண்டால் உங்கள் உள்ளம் கடினமாகி விடும். உங்களுள் பேச்சு மட்டுமே எஞ்சியிருக்கும். அதனை இறைவன் விரும்பாமல் வெறுப்புடன் பார்க்கிறான். எனவே நீங்கள் இரண்டு விதமான சாபங்களுக்கு அதாவது

மக்களுடைய சாபத்திற்கும் இறைவனுடைய சாபத்திற்கும் ஆளாகும் வண்ணம் நடந்து கொள்ளாதீர்கள்.

*(இஸாலயே அவ்ஹாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 546-547)*

இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவன், தன் கரத்தினால் மண்ணில் விதைத்த விதை ஆவீர்கள். இந்த விதை முளைக்கும்; பூக்கும்; எல்லாத் திசையிலும் இதன் கிளை படரும்; பின்னர் வலுவான ஒரு மரமாகி விடும் என இறைவன் கூறியுள்ளான்.

எனவே இறைவனின் வசனத்தில் நம்பிக்கை கொண்டு இடையில் ஏற்படும் சோதனைகளுக்கு அஞ்சாதவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவர். ஏனென்றால் சோதனைகள் வருவதும் மிகத் தேவையாகும். உலக வாதத்தில் உண்மையாளர்களையும் பொய்யர்களையும் சோதிக்கவே இறைவன் அவ்வாறு செய்கிறான். ஏதாவது சோதனையில் தடுமாறியவன் இறைவனுக்கு சிறிதும் இழப்பை ஏற்படுத்துவதில்லை. மேலும் தவறான எண்ணம் அவனை நரகத்திற்கு இட்டுச் செல்லும். அவன் பிறக்காமல் இருந்திருந்தால் அது நன்றாக இருந்திருக்கும். ஆனால் இறுதி வரை பொறுமையை மேற்கொள்வதுடன் சோதனை எனும் பூகம்பங்களையும் ஆட்டங்காணச் செய்யும் புயல்களையும் தாங்கி சமுதாயத்தின் ஏளனப் பேச்சையும், எள்ளிநகையாடுதலையும், இழிவையும் பொருட்படுத்தாது இருப்பவர்களே இறுதியில் வெற்றி அடைவர். அருள்களின் வாசல்கள் அவர்களை வரவேற்பதற்காக திறக்கப்படும்.

என் ஜமாஅத்திற்கு அறிவிற்கும்படி இறைவன் எனக்குக் கூறியதாவது: உலகப் பற்று கலவாத, வஞ்சகமோ, கோழைத்தனமோ கலவாத, கட்டுப்பாட்டின் எத்தகுதியையும் இழக்காத நம்பிக்கையைக் கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியோர் ஆவர். மேலும் அவர்களே உண்மையான பாதையில் செல்பவர்கள் ஆவர்.

*(அல்வஸிய்யத். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 309)*

நீங்கள் அநீதியில் பிடிவாதங்கொண்டு உண்மையை கொலை செய்யாதீர்கள். உண்மையை ஒரு சிறுவனிடமிருந்து பெற்றாலும் அதை ஏற்றுக் கொள்ளுங்கள். உண்மையை எதிரியிடம் கண்டால் உடனடியாக உங்கள் வீண் வாதங்களை விட்டு விடுங்கள். உண்மையில் நிலைத்திருங்கள். உண்மையான சாட்சி கூறுங்கள். ஏனெனில் சிலைகளின் அருவருப்பிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்; பொய் கூறுவதிலிருந்தும் விலகிக் கொள்ளுங்கள் என அல்லாஹ் கூறுகிறான். *(22:31)*

ஏனெனில் பொய் சிலையை விடக் குறைந்ததன்று. உண்மையிடமிருந்து உங்கள் முகத்தைத் திருப்பக் கூடிய எதுவும் உங்கள் வழியில் இருக்கும் சிலையேயாகும். உங்கள் பெற்றோர்கள், உடன் பிறப்புகள், நண்பர்கள் ஆகியோருக்கு எதிராக இருப்பினும் உண்மையான சாட்சி கூறுங்கள். எந்த ஒரு பகைமையும் உங்களை நேர்மையிலிருந்து தடுக்கக் கூடாது. மற்றவர்களிடம் கருமித்தனத்துடனோ, பகைமையுடனோ, பொறாமையுடனோ, வெறுப்புடனோ, துவேஷ மனப்பான்மையுடனோ நடந்து கொள்ளாதீர்கள்.

திருக்குர்ஆனின் முக்கிய போதனைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, ஓரிறை கொள்கை. இறை அன்பும், இறைவனுக்கு கட்டுப்படுதலும் ஆகும். மற்றொன்று, தன் உடன் பிறப்புகளுக்கும் அண்டை அயலாருக்கும் இரக்கம் காட்டுதல் ஆகும்.

*(இஸாலயே அவ்ஹாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 550)*

உண்மையை மேற்கொள்ளுங்கள்; உண்மையை மேற்கொள்ளுங்கள். உங்கள் உள்ளம் எப்படி இருக்கின்றது என அவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான். மனிதன் அவனை ஏமாற்ற முடியுமா என்ன? அவனுக்கு முன்னாலும் தந்திரங்கள் செல்லுபடியாகுமா என்ன?

*(இஸாலயே அவ்ஹாம். ரூஹானீ கஸாயின். தொகுதி 3 பக்கம் 549)*

என்னுடைய இந்த ஜமாஅத்தில் தங்களை இணைத்துக் கொண்டுள்ள மக்களே! இறையச்சத்தின் வழியில் உண்மையிலேயே நீங்கள் முன்னேறும்போதுதான் வானத்தில் என்னுடைய ஜமாஅத்தை சார்ந்தவராக கருதப்படுவீர்கள். எனவே உங்களுடைய ஐவேளை தொழுகைகளை நீங்கள் நேருக்கு நேர் இறைவனை காண்பது போன்ற முழுமையான இறையச்சத்துடன் தொழுது வாருங்கள். இறைவனுக்காக உளப்பூர்வமாக நோன்பைக் கடைபிடியுங்கள். ஸக்காத் (ஏழை வரி) கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் அதை தவறாது கொடுக்க வேண்டும். ஹஜ் என்னும் புனித கடமையைச் செய்ய தகுதி பெற்றவர்கள் எந்தத் தடையும் அவர்களுக்கு இல்லாதிருந்தால் அதைச் செய்ய வேண்டும்.

எல்லா நற்செயல்களையும் அழகிய முறையில் செய்து வாருங்கள். தீய செயல்களை வெறுத்து ஒதுக்குங்கள். இறையச்சத்தின் அடிப்படையில் அல்லாத எந்தச் செயலும் அந்த இறைவனை ஒருபோதும் சென்றடையாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒவ்வொரு நன்மையின் ஆணி வேர் இறையச்சமாகும். எந்தச் செயலில் இந்த ஆணி வேர் வீணாகவில்லையோ அந்தச் செயலும் வீணாகாது. உங்களுடைய முன்னோர்களான நம்பிக்கையாளர்கள் சோதிக்கப்பட்டது போன்றே பலவித இன்னல்களாலும், இடர்களாலும் நீங்கள் சோதிக்கப்படுவீர்கள். எனவே அத்தகைய தருணங்களில் உங்களுடைய கால்கள் தடுமாறாமலிருக்க விழிப்புடன் இருங்கள். உங்களுக்கு வானத்துடன் தொடர்பு இருக்குமானால் இந்த பூமியில் உங்களுக்கு யாராலும் எத்தீங்கும் இழைத்து விட முடியாது. உங்களுக்கு ஏதாவது இழப்பு ஏற்படுகிறதென்றால் அது உங்களின் கைகளாலேயே ஏற்படுகிறதேயொழிய எதிரிகளுடைய கைகளால் அல்ல.

உலகியல் மதிப்பை நீங்கள் இழந்து விட்டால் இறைவன் உங்களுக்கு என்றும் அழியாத கவுரவத்தையும், மதிப்பையும் வானத்தில் தந்தருள்வான். எனவே நீங்கள் அந்த இறைவனை விட்டு விடாதீர்கள். அவன் வழியில் நீங்கள் உறுதியாக இருக்கிறீர்களா என அவன் உங்களை சோதிக்கிறான். உங்களுடைய பல நல்ல திட்டங்களும் செயல்களும் தோல்வியடையலாம். ஆனால் இந்த மாதிரியான நிலை ஏற்படும்போது நீங்கள் தளர்வடைந்து விடக் கூடாது. ஏனெனில் இறைவழியில் நீங்கள் உறுதியாக

நிற்கின்றீர்களா என்று அந்த இறைவன் உங்களை சோதனை செய்கிறான். வானத்தில் உள்ள வானவர்கள் உங்களை புகழ்ந்து வாழ்த்த வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் இகழப்பட்டாலும் மகிழ்ச்சி அடையுங்கள்; தூற்றப்பட்டாலும் நன்றி கூறுங்கள்; தோல்வி கண்டாலும் இறைவனுடன் நீங்கள் கொண்டுள்ள உறவை துண்டித்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் இறைவனின் இறுதியான ஜமாஅத்தாக இருக்கிறீர்கள். எனவே உயர்தகுதிக்கு உங்களை இட்டுச் செல்லக் கூடிய நற்செயலை செய்து காட்டுங்கள்.

***(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 15)***

வானத்தில் உங்கள் மீது இறைவன் திருப்தி கொள்ள வேண்டுமென்று எண்ணினால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போன்று ஆகி விடுங்கள். உங்களிடையே கண்ணியத்திற்குரியவர் தன்னுடைய சகோதரனின் தவறுகளை மன்னிக்கின்றவரேயாவார். பிடிவாதம் கொண்டு அவ்வாறு மன்னிக்கத் தவறுகின்றவர் பேறிழந்தவர் ஆவார். அத்தகையவரோடு எனக்கு எவ்வித உறவுமில்லை.

இறைவனுடைய சாபத்திற்கு மிகவும் அஞ்சிக் கொள்ளுங்கள். ஏனெனில் அவன் தூய்மையானவனும் தன்மானம் கொண்டவனுமாவான். கெட்ட நடத்தை உடைய ஒருவனால் இறைவனை அணுக இயலாது. அகம்பாவமும் இறுமாப்பும் நிறைந்த ஒருவனால் அவனை அடையவே முடியாது. அநியாயக்காரனால் அவனை அணுக முடியாது. நம்பிக்கை துரோகியாலும் அவனை நெருங்க முடியாது. அவனுடைய திருநாமங்களை உணர்ந்து இறையச்சத்துடன்

நடக்காதவன் அவனை ஒருபோதும் நெருங்க முடியாது. உலகின் மீது நாய்களைப் போன்றும், எறும்புகளைப் போன்றும், கழுகுகளைப் போன்றும் விழுகின்றவர்களும் உலக சுக போகங்களில் மூழ்கியிருப்பவர்களும் இறைவனின் நெருக்கத்தை அடைவது என்பது முடியாது. தூய்மையற்ற ஒவ்வொரு கண்ணும் அவனை விட்டும் வெகுதூரம் அகன்று போனதாகும். தூய்மையற்ற எந்த உள்ளமும் அவனை அறியாது. எவர் இறைவனுக்காக நெருப்பில் வீழ்வாரோ அவர் அதிலிருந்து காப்பாற்றப்படுவார். எவர் இறைவனுக்காக அழுவாரோ அவரே சிரிப்பார். எவர் அவனுக்காக உலகிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வாரோ அவர் அவனை அடைவார்.

நீங்கள் உளப்பூர்வமாகவும், தூய்மையாகவும், தீவிரமாகவும் இறைவனுடன் நட்பு கொள்வீர்களாயின் அவனும் உங்களுடைய நண்பனாக ஆகி விடுவான். உங்கள் அடிமைகளிடமும் உங்கள் மனைவிமார்களிடமும் உங்களுடைய ஏழை சகோதரர்களிடமும் நீங்கள் கருணை காட்டுங்கள். அப்போதுதான் வானத்தில் உங்களுக்கு கருணை காட்டப்படும். உண்மையாகவே நீங்கள் இறைவனுக்காக ஆகிவிட்டால் இறைவனும் உங்களுக்காக ஆகி விடுவான்.

*(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 12-13)*

ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுறுத்துகிறேன். ஏனெனில் கண்ணியமிக்க நமது இறைவனின் பார்வையில் ஆணவம் வெறுக்கத்தக்கதாகும். ஆனால் ஆணவம் என்னவென்று

நீங்கள் அறியாமல் இருக்கலாம். எனவே என்னிடமிருந்து தெரிந்து கொள்ளுங்கள். நான் இறைவனின் ஆவியால் பேசுகிறேன்.

ஒருவன் தன் சகோதரனை விட தன்னை அறிவாளி, புத்திசாலி, திறமை மிக்கவன் என எண்ணி அவனை தாழ்ந்தவனாகக் கருதினால் அது ஆணவமாகும். ஏனெனில் அவன் இறைவனை அறிவு, ஞானம் ஆகியவற்றின் உறைவிடமாகக் கருதவில்லை. தன்னையே பெரியவனாக மதிக்கிறான். அவனைப் பைத்தியமாக்கி விட்டு தாழ்ந்தவனாக எண்ணும் அவன் சகோதரனுக்கு அவனை விட சிறந்த அறிவையும், ஞானத்தையும், திறமையையும் கொடுக்க இறைவனுக்கு வல்லமை இல்லையா? அவ்வாறே தன் செல்வம், செல்வாக்கு, கவுரவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தன் சகோதரனை அற்பமாக மதித்தால் அவனும் ஆணவம் கொண்டவனே. ஏனெனில் அவன் அப்பெயரையும் புகழையும் இறைவனே அவனுக்கு அளித்தான் என்பதை மறந்துவிட்ட குருடனாவான். அவனை கால சுழற்சியால் ஒரு நொடியில் அடிமட்டத்தில் ஆழ்த்தி அவன் அற்பமாக மதித்த சகோதரனுக்கு அவனை விடச் சிறந்த செல்வத்தையும் செல்வாக்கையும் அளிக்க அந்த இறைவன் வல்லமை மிக்கவன் என்பதை அவன் உணர்வதில்லை. அவ்வாறே நல்ல உடற்கட்டும், கம்பீரமும், பலமும் உள்ள ஒருவன் தன் சகோதரனை கேலியும், கிண்டலும் செய்து இழிவான பெயர் சூட்டி, அவனுடைய உடற்குறைகளை பிறரிடம் எடுத்துக் கூறினால் அவனும் ஆணவமுடையவன் ஆவான். ஆனால் ஒரு நொடியில் அவனுக்கு உடற்குறைகளை ஏற்படுத்தி அந்த

சகோதரனை விடக் கீழ்த்தரமான நிலையில் ஆக்கக் கூடிய இறைவன் இருக்கிறான் என்பதை உணராததே அதற்குக் காரணமாகும்.

*(நுஸூலுல் மஸீஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 402)*

தவறான எண்ணம் கொள்வது, மற்றவர்களின் செயலுக்கு தீய நோக்கம் கற்பிப்பது ஆகியவை மனிதனிடமுள்ள கொடிய நோயாகும். நெருப்பு காய்ந்த விறகை எரிப்பது போன்று அது ஈமானையும் (இறைநம்பிக்கையையும்), நன்னடத்தையையும் எரித்து விடுகிறது. மேலும் இந்த நோயுள்ள மக்கள் இறைவனால் அனுப்பப்பட்டவரைப் பற்றி தவறான எண்ணம் கொண்டு அவரைத் துன்புறுத்துகின்றபோது இறைவனே அவர்களுக்கு எதிரியாகி அவர்களுடன் போரிட ஆயத்தமாகின்றான். அவன் தன் நல்லடியார்களின் கண்ணியத்தை காப்பதில் வைத்துள்ள உணர்வு ஈடிணையற்றது. நான் பல்வேறு தாக்குதல்களுக்கு ஆளானபோது அந்த இறைவனின் அதே தன்மானக் காப்புணர்வே பாதுகாப்பாக செயல்பட்டது.

*(அல்வஸிய்யத். அடிக்குறிப்பு. ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 317)*

நான் உண்மையாகவே கூறுகிறேன். தவறான எண்ணம் கொள்வது மிகத் தீய ஆபத்தாகும். அது மனிதனின் நம்பிக்கையை அழித்து விடுகிறது. மேலும் உண்மை, நேர்மை ஆகியவற்றிலிருந்து உங்களை நெடுந்தொலைவு எறிந்து விடுகிறது. நண்பர்களைப் பகைவர்களாக்குகிறது. சித்தீக் எனும் உண்மையாளரின் உயர்தகுதியை அடைவதற்கு

ஒருவன் தவறான எண்ணங்களிலிருந்து முற்றிலும் விலகுவது இன்றியமையாதது. ஒருவரைக் குறித்து தவறான எண்ணம் ஏற்பட்டால் அந்த தவறான எண்ணத்தால் ஏற்படக் கூடிய தீய விளைவுகளிலிருந்து காத்துக் கொள்ளவும், அக்குற்றத்திற்காக மிகுதியாக பாவமன்னிப்புக் கோரி அல்லாஹ்விடம் இறைஞ்சுதலும் வேண்டும். இதனை இலேசானதாகக் கருதாதீர்கள். இது மனிதனை விரைவில் அழித்து விடும் மிகக் கொடிய நோயாகும்.

*(மல்ஃபூஸாத். தொகுதி 1 பக்கம் 372)*

நீங்களும் இரக்கத்தன்மை, தனது ஆன்மாக்களை தூய்மை செய்தல் ஆகியவற்றின் மூலம் தூய ஆவியின் பங்கினைப் பெறுங்கள். ஏனெனில் தூய ஆவியின்றி உண்மையான இறையச்சத்தைப் பெற முடியாது. மன இச்சையினை முற்றிலும் விட்டு விட்டு இறைவிருப்பத்தைப் பெறும் பொருட்டு எல்லா வழிகளையும் விட குறுகலான அவ்வழியினை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். உலக இன்பங்களைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். அது இறைவனிடமிருந்து விலக்கி விடுகின்றது. இறைவனுக்காக கசப்பான வாழ்வை மேற்கொள்ளுங்கள். இறை விருப்பத்தை பெறக் கூடிய துன்பம் அவன் வெறுப்பைப் பெறக் கூடிய இன்பத்தை விட சிறந்தது. இறை கோபத்திற்குக் காரணமாகக் கூடிய வெற்றியை விட இறைதிருப்தியை பெறக் கூடிய தோல்வியே சிறந்தது. இறைவனின் கோபத்தை நெருங்கச் செய்யும் அன்பை விட்டு விடுங்கள். நீங்கள் உள்ளத்தை தூய்மை செய்து அவன் பக்கம் வருவீர்கள் என்றால்

ஒவ்வொரு வழியிலும் அவன் உங்களுக்கு உதவி செய்வான். எந்தப் பகைவனாலும் உங்களுக்கு தீங்கிழைக்க முடியாது.

*(அல் வஸிய்யத். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 307)*

லிபாஸுத் தக்வா (இறையச்சத்தின் ஆடை) என்பது திருக்குர்ஆனின் ஒரு சொல் வழக்காகும். ஆன்மீக அழகும், அலங்காரமும் இறையச்சத்தின் மூலமாக மட்டுமே பெற முடியும் என்பதை திருக்குர்ஆன் இவ்வாறு சுட்டிக் காட்டுகிறது. நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருளைப் போன்று தனக்கு வழங்கப்பட்ட (அறிவு, செல்வம் ஆகிய) தகுதிகளை முறையாகப் பயன்படுத்துவதும், நம்பிக்கை தொடர்பான உறுதி மொழிகளை ஒருவர் தன்னால் இயன்ற அளவுக்கு பேணுவதுமே தக்வா (இறையச்சம்) என்பதன் பொருளாகும். மக்களிடமும் இறைவனின் ஏனைய படைப்பினங்களிடமும் தனக்குள்ள கடமைகளை தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளாக உணர்ந்து செயல்படுவதும் இறையச்சமாகும். இறையச்சத்தின் பாதையில் மிக நுட்பமான பகுதிகளையும் ஒருவர் முடிந்த அளவுக்கு கடைபிடிக்க வேண்டும்.

*(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5. ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 210)*

## *10. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எதிர்காலம்*

நான் மிக வாதிட்டும், உறுதியுடனும் கூறுகிறேன். நான் உண்மையாளன். இறையருளால் இந்த அரங்கில் எனக்கே வெற்றியாகும். இயன்ற அளவு தொலை நோக்குடன் பார்க்கும்போது முழு உலகத்தையும் என் உண்மையின் காலடியில் காண்கிறேன். மிக விரைவில் நான் சிறப்பு மிக்க வெற்றி ஒன்றினை அடைவேன். ஏனெனில் என் நாவிற்குத் துணையாக இன்னொரு நாவு பேசுகிறது; என் கையை வலுவூட்ட இன்னொரு கை செயல்படுகிறது. அதை உலகம் காண்பதில்லை. ஆனால் நான் அதைக் காண்கிறேன். என் உள்ளத்தில் விண்ணுலகைச் சேர்ந்த ஆவி ஒன்று பேசுகிறது. அது என் சொல் ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு வாக்கிற்கும் உயிரூட்டுகிறது. விண்ணில் ஒரு துடிப்பும் கொதிப்பும் எழுந்துள்ளது. அது இந்த ஒரு பிடி மண்ணை பொம்மை போன்று எழுப்பியுள்ளது. எவர் மீது பாவமன்னிப்பின் வாசல் மூடப்படவில்லையோ அவர் நான் சுயமாக எதையும் செய்யவில்லை என்பதை மிக விரைவில் கண்டு கொள்வார். உண்மையாளரைப் பிரித்தறிய முடியாத கண்கள் ஒளியுள்ளனவா? இந்த விண் ஒளியை உணராதவன் உயிருள்ளவனா?

*(இஸாலயே அவ்ஹாம் பாகம் 2. ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 403)*

உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். இது இறைவன் கையால் நடப்பட்ட செடியாகும். இறைவன் ஒருபோதும் இதை வீணாக்க மாட்டான். இதை முழுமை பெறச் செய்யாதவரை அவன் திருப்தியடைய மாட்டான். அவன் அதற்கு நீர் ஊற்றுவான்; வேலியமைப்பான்; வியத்தகு வெற்றிகளை வழங்குவான். நீங்கள் என்னை எதிர்ப்பதில் குறை எதுவும் வைத்தீர்களா? எனவே இது மனிதனின் வேலையாக இருந்திருப்பின் என்றோ வெட்டப்பட்டிருக்கும். அதன் எந்த அடையாளமும் எஞ்சியிருக்காது.

*(அஞ்சாமே ஆத்தம். ரூஹானி கஸாயின் தொகுதி 11 பக்கம் 64)*

## 11. இறுதி வெற்றி

இறுதியில் கிறித்தவ மார்க்கம் பூமியில் பரவி விடும் என்றோ அல்லது புத்த மதம் முழு உலகையும் சூழ்ந்து கொள்ளும் என்றோ உலக மக்கள் நினைக்கலாம். அவர்களின் இந்த எண்ணம் தவறானது. நினைவில் கொள்ளுங்கள். விண்ணில் எழுதப்படாத வரை மண்ணில் எதுவும் நிகழ்வதில்லை. இறுதியில் இஸ்லாமே மக்களின் உள்ளங்களை வெல்லும் என விண்ணுலகின் இறைவன் எனக்கு அறிவித்துள்ளான்.

*(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5 ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 427)*

## *12. ஆன்மா*

உடல், ஆன்மாவின் தாயாக விளங்குகிறது என்ற உண்மை ஆழ்ந்து சிந்தித்தால் தெரிய வரும். ஆன்மா என்பது எங்கோ வெளிப்புறத்திலிருந்து கர்ப்பவதியின் கருப்பையினுள் வந்து இறங்குவதன்று. அது ஆணின் விந்துவில் மறைந்துள்ள ஓர் ஒளியாகும். கரு வளர, வளர ஆன்மாவும் வளர்ந்து ஒளி வீசத் தொடங்கும். விந்தணுவிலிருந்து ஏற்பட்டு தாயின் கருப்பையில் உருவாக்கப்படும். ஆன்மா உடலுடன் வளர்ந்து வருவதாக வல்லமையுள்ள இறைவனின் சொல்லும் நமக்குத் தெரிவிக்கின்றது. அந்தத் திருவசனம்:

பிறகு (கருப்பையில் உருவாக்கிய) அதனை நாம் வேறொரு புதிய படைப்பு நிலைக்குக் கொண்டு வருகிறோம். ஒப்பற்ற படைப்பாளனாகிய இறைவன் எல்லாப் புகழுக்கும் உரியவன். (23: 18)

கருப்பையில் உருவான உடலலை இறைவன் மற்றொரு புதிய படைப்பாக வெளிப்படுத்துகின்றான். அப்புதிய படைப்பே ஆன்மா எனப்படும் என இந்தத் திருவசனத்திலிருந்து அறிகிறோம். தன்னிகரில்லாத படைப்பாளனாகிய இறைவனே எல்லா புகழுக்கும் உரியவன்.

*(இஸ்லாமீ உஸூல் கீ ஃபிலாஸஃபி. ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 321)*

தண்ணீரில்லா தோட்டம் வளர்ச்சியும், செழிப்பும், பசுமையும் இல்லாமற் போவதைப் போன்று நற்செயல்கள் இல்லாத ஈமான் உயிரும், வளர்ச்சியும் அற்றுப் போய்விடுகிறது. எனவே அவ்வகை ஈமான் பயனற்றதாகும். அதே போன்று ஈமான் இல்லாமல் செய்யப்படும் நற்செயல்கள் - அதாவது நன்னம்பிக்கையால் தூண்டப்பெறாத நற்செயல்கள் வெறும் நடிப்பு அல்லது பகட்டே ஆகும்.

இஸ்லாம் கூறும் சொர்க்கமானது, இவ்வுலக வாழ்வின் நன்னம்பிக்கை, நற்செயல்கள் ஆகியவற்றின் பிரதிபலிப்பாக இருக்குமேயன்றி வெளியிலிருந்து கிடைப்பதன்று. மனிதனுடைய சொர்க்கமோ அவனுடைய அந்தரங்கத்திலிருந்தே - உள்ளத்திலிருந்தே உருவாகின்ற ஒன்றாகும். ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் சொர்க்கம் அவருடைய நன்னம்பிக்கையாலும் நற்செயலாலும் உருவாகுவதாகும். இவ்வாறு அந்த சொர்க்கத்தின் பேரானந்தத்தை இவ்வுலகிலேயே அனுபவிக்கத் தொடங்குகிறார்.

*(இஸ்லாமீ உஸூல் கீ ஃபிலாஸஃபி. ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 390)*

## 13. மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கை

ஒவ்வொருவருக்கும் கபரிலேயே இன்பத்தையும் தண்டனையையும் உணரத் தேவையான உடல் கிடைக்கிறது என்பது இஸ்லாத்தில் உள்ள மிக உயரிய ஒரு தத்துவமாகும். அந்த உடல் எந்தப் பொருளால் உருவாக்கப்படுகிறது என்பதை நம்மால் சரியாகக் கூற முடியாது. ஏனெனில் அழியக் கூடிய இந்த உடல் நிலையற்றதேயாகும். மேலும்

உண்மையில் இந்த உடலே கபரில் உயிர் பெறுவதாக எவரும் காண்பதுமில்லை. ஏனென்றால் சிலவேளை இந்த உடல் எரிக்கப்படுகிறது. மேலும் அருங்காட்சியகங்களில் காட்சிக்கு வைக்கப்படுகிறது. கபருக்கு வெளியே நீண்ட காலம் வைக்கப்படுகிறது. இதே உடல் உயிர் பெறுவதாக இருந்தால் மக்கள் அதனைப் பார்த்திருத்தல் வேண்டும். ஆனால் அதே வேளையில் அது உயிர் பெறுகிறது எனத் திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகின்றது. எனவே நாம் காணாத ஒரு வேறு உடல் மூலம் மனிதன் உயிர்ப்பிக்கப்படுகிறான் என நம்ப வேண்டியது வருகிறது. பெரும்பாலும் அந்த உடல் இந்த உடலின் மிக நுண்ணிய மூலக்கூறுகளால் உருவாகிறது. உடல் பெற்ற பின்னர் மனித புலனுணர்வுள்ள பழைய நிலையை அடைகிறது. இந்த இரண்டாவது உடல் முதல் உடலை விட மிக நுட்பமானது. எனவே ஆன்மீகக் காட்சிகளின் வாசல்கள் அதற்கு மிகவும் விரிவாக திறக்கப்படுகின்றன.

*(கிதாபுல் பரிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 70-71)*

## *14.* உலக சமயங்கள்

உலகில் தூதர்கள் மூலம் பரவியுள்ளவையும் உறுதியாக நிலைகொண்டவையும் உலகின் ஒரு பகுதியை சூழ்ந்து கொண்டவையும் நெடுங்காலம் நிலைத்தவையும் நீண்ட ஆயுளைப் பெற்றவையும் ஆகிய அத்தனை சமயங்களும் எதுவும் அதன் அடிப்படையில் பொய்யானது அன்று என்றும், அத்தூதர்களுள் எவரும் பொய்யர் அல்லர் என்றும்

இறைவன் எனக்கு அறிவித்துள்ளான். இதுவே நாம் உறுதியாக கொண்டுள்ள அடிப்படைகளுள் ஒன்றாகும்.

*(துஹ்ஃபயே கைஸாரிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 256)*

இது மிகவும் அன்பானதும் அமைதியை வழங்கக் கூடியதும் சமாதானத்தின் அடிப்படையை நாட்டக் கூடியதும் நல்லொழுக்க நிலைகளுக்கு உதவக் கூடியதுமான ஒரு கொள்கையாகும். அதாவது, உலகில் தோன்றிய எல்லாத் தூதர்களையும் அவர் இந்தியாவிலோ, பாரசீகத்திலோ, சீனாவிலோ வேறு ஏதாவது நாட்டிலோ தோன்றியவராக இருப்பினும் அத்தூதர்கள் எல்லாரையும் நாம் உண்மையாளர்கள் என ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுக்காக இறைவன் கோடிக்கணக்கானோரின் உள்ளங்களில் அவர்களிடத்து மதிப்பையும், மரியாதையும் உருவாக்கியுள்ளதுடன் அவர்களின் உண்மை சமயத்தை நிலைநிறுத்தியும் உள்ளான்.

*(துஹ்ஃபயே கைஸரிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 259)*

# *15.* பாவம்

உண்மையில் பாவம் என்பது மனிதன் இறைவனுக்குக் கட்டுப்படுவது, எழுச்சி மிக்க இறை நேசம், அன்புடன் இறைவனை நினைவு கூர்தல் ஆகியவற்றை இழந்துவிடும் நேரத்தில் உருவாகும் விஷமாகும். ஒரு மரம் மண்ணிலிருந்து பிடுங்கப்பட்டு அது தண்ணீரை உறிஞ்சுவதற்குள்ள தகுதியை இழந்து விட்டால் நாளுக்கு நாள் காய ஆரம்பித்து விடுகிறது. அதன் பசுமையெல்லாம் மறைந்து விடுகிறது. இறை நேசத்திலிருந்து பிடுங்கப்பட்ட உள்ளமுடையவரின் நிலையும் இது போன்றதேயாகும். காய்ந்து உலர்வதைப் போன்று பாவம் அவரிடம் மேலோங்குகிறது. எனவே இந்த உலர்தலுக்கு இறைவனின் இயற்கைச் சட்டத்தில் மூன்று வகை மருந்துகள் இருக்கின்றன. 1. அன்பு. 2. இஸ்திஃபார். இதன் பொருள் மறைத்தல் அல்லது புதைத்தலுக்கு உரிய நாட்டம். ஏனெனில் மரத்தின் ஆணிவேர் மண்ணில் உறுதியாக இருக்கும் வரை அது செழிப்புடன் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. 3. கழிவிரக்கம் (தவ்பா). அதாவது வாழ்வின் நீரை உறிஞ்சுவதற்காக பணிவுடன் இறைவனிடம் திரும்பி அவன் பக்கம் நெருங்கி பாவத்தின் திரையிலிருந்து நற்செயல்கள் மூலம் தங்களை வெளிக்கொணர்வதாகும். கடந்த குற்றங்களுக்காக நாவால் மட்டும் இரங்குதல் கழிவிரக்கம் ஆகாது. மாறாக, கழிவிரக்கம் கொள்வது நற்செயல்களால் முழுமை பெறுகிறது. எல்லா நன்மைகளும் கழிவிரக்கம் முழுமை பெறுவதற்காகவே ஆகும்.

*(சிராஜுத்தீன் ஈஸாயீ கே சார் சவாலோன் கா ஜவாப். ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 328-329)*

## 16. மீட்பு

மீட்பு பற்றி சுவிஷேசங்களில் கூறப்பட்டிருக்கின்ற விவகாரமாகிய அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சிலுவை மரணத்தை நம்புவதன் மூலமாக மீட்பு பெறலாம் என்ற கொள்கையை திருக்குர்ஆன் ஏற்றுக் கொள்ளவில்லை. திருக்குர்ஆன் ஈஸா (அலை) அவர்களை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நபியாக ஏற்றுக் கொள்கிறது. மேலும் இறைவனின் அன்பிற்கும் நெருக்கத்திற்கும் உரியவரும், புகழுக்கு உரியவரும் ஆவார் எனக் கூறுகிறது. ஆயினும் அவரை ஒரு மனிதனாக மட்டுமே குறிப்பிடுகிறது. மீட்பிற்கு ஒரு பாவியின் சுமையை பாவமற்ற இன்னொருவரின் தலையில் சுமத்துவது தேவை எனத் திருக்குர்ஆன் கூறவில்லை. ஸைத் என்பவர் செய்த பாவத்திற்கு பக்ர் என்பவர் தண்டிக்கப்படுவதை பகுத்தறிவும் ஏற்றுக் கொள்வதில்லை. இதன்படி மனித அரசுகள் கூட செயல்படுவதில்லை. கிறித்தவ நண்பர்கள் பாவமன்னிப்பு விஷயத்தில் தவறு இழைத்துள்ளதைப் போன்றே ஆரிய நண்பர்களும் தவறு இழைத்து விட்டனர் என்பது வருந்தத்தக்கது. உண்மையை அவர்கள் மறந்து விட்டனர். ஏனெனில் கழிவிரக்கம் கொண்டு பாவமன்னிப்பு கோருவது ஆரிய நண்பர்களின் கொள்கையின்படி பொருளற்ற ஒன்றாகும். ஒருவர் ஒரு குற்றம் செய்தால் அக்குற்றத்திற்காக வரையறுக்கப்பட்டுள்ள எல்லா மறு பிறவிகளும் எடுக்காத வரை மன்னிப்பு பெற முடியாது என்பது அவர்களின் கருத்தாகும்.

*(சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 414)*

## 17. இறைவழியில் அறப்போர்

பலவந்தத்தை இஸ்லாம் ஒருபோதும் ஆதரிக்கவில்லை என்பது தெளிவானது. திருக்குர் ஆனையும், ஹதீஸ் நூல்களையும், வரலாற்று நூல்களையும் கவனமாக ஆராய்ந்து முடிந்த வரை சிந்தனையோடு படித்தாலோ, கவனித்தாலோ மார்க்கத்தைக் கட்டாயமாகப் பரப்புவதற்காக இஸ்லாம் வாளெடுத்தது என்ற குற்றச்சாட்டு முற்றிலும் அடிப்படையற்றதும், இஸ்லாத்திற்கெதிரான இழிவான குற்றச்சாட்டுமாகும் என்பதை உறுதியாக உணரலாம். இது திருக்குர்ஆனையும், ஹதீஸையும், நம்பத்தகுந்த இஸ்லாமிய வரலாற்றையும் பற்றற்ற நிலையில் படிக்காமல் பொய்யை தாராளமாக பயன்படுத்தி தவறான குற்றச்சாட்டுகளை சுமத்தியவர்களின் கூற்றாகும். ஆனால் உண்மையின் பக்கம் பசியும் தாகமும் கொண்டவர்கள் இந்தக் குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என்பதை உணர்ந்து கொள்ளும் காலம் நெருங்கி விட்டது என்பதை நான் அறிவேன். மார்க்கத்தில் கட்டாயமில்லை என்றும், யாரையும் இஸ்லாத்தை ஏற்கச் செய்வதற்காக வற்புறுத்தலையோ, கட்டாயத்தையோ பயன்படுத்துவதற்கு அனுமதி இல்லை என்றும் அந்த மார்க்கத்தின் மறைநூல் - திருக்குர்ஆன் தெளிவாகத் தெரிவிக்கும்போது அந்த மார்க்கத்தை - கட்டாயப்படுத்தும் மார்க்கம் என்று விமர்சிக்க முடியுமா என்ன? மார்க்கத்தில் பலவந்தம் இல்லை என்றே திருக்குர்ஆன் கூறுகிறது.

எதிரிகளின் தீமைக்குப் பதிலாக தீமையைச் செய்ய வேண்டாம் என்றும், சகிப்புத் தன்மையையும், மன்னிப்பையும் கடைபிடிக்க வேண்டுமென்றும் பதிமூன்று காலம் மாக மக்காவில் இரவு பகலாக தம் தோழர்கள் அனைவருக்கும் அறிவுரை செய்து வந்த அந்த சிறப்பு மிகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பற்றி அவர்கள் பலவந்தத்தை கையாண்டார்கள் என குற்றம்சாட்ட முடியுமா? ஆனால் எதிரியின் தீய செயல்கள் உச்ச கட்டத்தை அடைந்தபோது -இஸ்லாத்தை துடைத்தெறிவதற்கு எல்லாரும் முயன்றபோது - இறைவனின் தன்மானம் வாளை எடுத்தவர்கள் வாளாலேயே அழிக்கப்பட வேண்டும் என்பதை செயல்படுத்தியது. இது தவிர கட்டாயப்படுத்துவதைப் பற்றித் திருக்குர்ஆன் ஒருபோதும் போதிக்கவில்லை. கட்டாயப்படுத்துவதைப் பற்றி இஸ்லாம் போதனை செய்திருந்தால், மதமாற்றம் செய்வதற்கு பலவந்தம் செய்யப்பட்டிருந்து நபித்தோழர்கள் அந்த பலவந்தத்தின் கனிகளாக இருந்திருந்தால் சோதனையான தருணங்களில் அவர்கள் நன்னம்பிக்கையாளர்களைப் போன்று உறுதியுடனும், உளப்பூர்வமாகவும் செயல்பட்டிருக்க மாட்டார்கள். எங்கள் எஜமானர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தோழர்களின் நம்பிக்கையுணர்வும் நேர்மையும் எப்படிப்பட்டது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும். அதை நாம் குறிப்பிட்டுக் கூற வேண்டிய தேவையில்லை.

அவர்களுடைய உண்மையான பற்று நேர்மையின் முன்மாதிரி எந்த அளவுக்கு உயர் தகுதியுடையது என்றால் மற்ற

எந்த சமுதாயத்திலும் அதற்கு எடுத்துக் காட்டு காணவியலாது என்பது யாருக்கும் மறைவான ஒன்றல்ல. அந்த நன்றி மறவா சமுதாயம் வாளின் கீழும் கூட தங்களின் நன்றி மறவாமை, நேர்மை ஆகிய பண்புகளை கைவிடவில்லை. மாறாக, அவர்கள் தூய நபி (ஸல்) அவர்களின் தோழமையினால் மட்டுமேயன்றி வேறு எவராலும் காட்ட முடியாத அளவுக்கு நெஞ்சிலும், இதயத்திலும் உண்மையான ஒளியால் பிரகாசிப்பவர்களாக நேர்மைக்கு சான்றாக திகழ்ந்தனர். சுருக்கமாகக் கூறுவதென்றால், இஸ்லாத்தில் பலவந்தத்திற்கு இடமே இல்லை.

*(மஸீஹ் ஹிந்துஸ்தான் மே. ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 11-12 )*

உலகில் வாழ்ந்திருந்த உண்மை முஸ்லிம்கள் எவரும் இஸ்லாத்தை வாளால் பரப்ப வேண்டும் என்ற கொள்கை உடையவர் அல்லர். மாறாக, எப்போதும் இஸ்லாம் தனக்குரிய சிறப்புகளின் காரணமாகவே உலகில் பரவியது. எனவே முஸ்லிம் எனக் கூறிக் கொண்டு இஸ்லாத்தை வாளால்தான் பரப்ப வேண்டும் என்று கூறுபவர் இஸ்லாத்திற்குரிய தனிச் சிறப்புகளை அறியாதவர்கள் என்றே கூற வேண்டும்.

*(திர்யாக்குல் குலூப். ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 167)*

## *18. பிரார்த்தனை (துஆ)*

இறையருள் நெருங்கிவிடும்போது பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான வழிவகைகளை இறைவன் ஏற்படுத்துகிறான். உள்ளத்தில் ஒரு பணிவும் உருக்கமும் ஏற்படுகிறது. ஆனால் பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படும் காலம் வரவில்லை என்றால் உள்ளத்தில் நிம்மதியும் திரும்பும் நிலையும் ஏற்படுவதில்லை. இயல்பை எவ்வளவு வற்புறுத்தினாலும் இயல்பு கவனம் காட்டுவதில்லை. இதன் காரணம் என்னவென்றால், சில வேளை இறைவன் தன்னுடைய குறிப்பிட்ட முடிவை ஏற்க வைக்க நாடுகிறான்; இன்னும் சில வேளை வேண்டுதலை ஏற்றுக் கொள்கிறான். எனவே இறை கட்டளையின் அறிகுறியைக் காணாத வரை ஏற்றுக் கொள்வதைக நான் குறைவாகவே எதிர்பார்க்கிறேன். மேலும் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதனால் ஏற்படும் மகிழ்ச்சியை விட இறைவனின் குறிப்பிட்ட முடிவில் மிகுந்த மகிழ்ச்சியுடன் திருப்தியடைகிறேன். ஏனெனில் இறை முடிவில் மனநிறைவு கொள்வதனால் ஏற்படும் காரணிகளும் அருள்களும் அதனை விட மிகுதியானவையாகும்.

*(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 460)*

## *19.* மக்களிடத்து அனுதாபம் காட்டுதல்

முழு மனித இனத்திடமும் அன்பு காட்ட வேண்டும் என்பது நம் கொள்கையாகும். ஒருவன் அக்கம்பக்கத்தில் வாழும் இந்துவின் வீடு தீப்பற்றி எரிவதைக் கண்டும் அத்தீயை அணைக்க முன்வரவில்லை என்றால், நான் உண்மையாகவே கூறுகிறேன் அவன் என்னை சேர்ந்தவன் இல்லை. மேலும் என்னைப் பின்பற்றும் ஒருவன், கிறித்தவர் ஒருவர் கொலை செய்யப்படுவதைக் காணும்போது அவரை விடுவிக்கவில்லை என்றால் அவர் என்னைச் சேர்ந்தவர் இல்லை என நான் உண்மையாகவே கூறுகிறேன்.

*(சீராஜே முனீர். ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 28)*

முஸ்லிம் கிறித்தவர், இந்து, ஆரியர் ஆகிய எல்லாருக்கும் நான் ஒன்றை தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்குப் பகைவர் இல்லை. பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட மிகுதியாக மனித இனத்தை நான் நேசிக்கிறேன். உண்மையை கொலை செய்கின்ற தவறான கொள்கைகளுக்கே நான் எதிரியாவேன். மனித நேயம் என் கடமையாகும். பொய், இணை வைத்தல், கொடுமை, எல்லா வகையான தீய செயல்கள், நேர்மையின்மை, அநியாயம், தீய ஒழுக்கம் ஆகியவற்றை வெறுத்து ஒதுக்குவது ஆகியவை எனது கொள்கையாகும்.

*(அர்பயீன் எண் 1 ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 344)*

## *20.* வானவர்கள்

திருக்குர்ஆனை ஆழமாக சிந்தித்தால் மனிதன் மற்றும் உலகிலுள்ள எல்லாப் பொருள்களின் அகப்புற வளர்ச்சிக்கும் சில ஊடகங்கள் தேவை எனத் தெரிகிறது. திருக்குர்ஆன் கூறும் இன்னும் சில சாத்தியக் கூறுகளிலிருந்து வானவர்கள் என அழைக்கப்படும் தூய ஆவிகளுக்கு விண்ணுலகப் பொருள்களுடன் உள்ள தொடர்புகள் வெவ்வேறானவை எனத் தெளிவாகத் தெரிகிறது. சில அதற்கெனக் குறிப்பிட்ட வினைத் திறத்தால் காற்றை வீசச் செய்கின்றன. இன்னும் சில மழையைப் பொழியச் செய்கின்றன. இன்னும் சில தாம் வினைத் திறனை பூமியில் செயல்படுத்துகின்றன.

*(தவ்ஸீஹே மராம். ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 70)*

இன்னும் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இஸ்லாத்தின் ஷரீஅத் சட்டத்தின்படி வானவர்களின் செயல் திறன், தகுதி மனிதரின் செயல் திறனை விட மிகுந்ததன்று. மாறாக, மனிதர்களின் செயல் திறன்கள் வானவர்களின் செயல் திறன்களை விடச் சிறந்தவையாகும். பௌதீக மற்றும் ஆன்மீக அமைப்புகளில் அவற்றின் ஊடகமாக வானவர்கள் இருப்பது அந்த வானவர்களின் சிறப்புக்கு சான்றாக அமையாது. மாறாக, திருக்குர்ஆனின் போதனையின்படி அவர்கள் ஒரு தொண்டர்களைப் போன்று அவ்வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

*(தவ்ஸீஹே மராம். ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 74)*

வானவர்கள் இறங்குகின்றனர் என்பதன் பொருள் என்ன? என்று அறியாமையால் சிலர் கேட்கலாம். ஒரு மக்கள் கூட்டத்தை சீர்திருத்தி அவர்களை மார்க்கத்தின் பக்கம் மீண்டும் திருப்புவதற்காக ஒரு தீர்க்கதரிசி அல்லது இறைவனின் திருத்தூதர் அல்லது ஒரு முஹத்தஸ் (இறைவனுடன் உரையாடுபவர்) வானத்திலிருந்து இறங்கும்போது வானவர்களும் அவரோடு சேர்ந்து இறங்குகின்றனர் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும். இந்த வானவர்கள் மனிதனின் உள்ளங்களில் - ஆர்வம் கொண்டுள்ள உள்ளங்களில் நுழைக்கின்றனர். நற்பண்பின் பக்கம் அவர்களை இழுக்கின்றனர். இதனால் நிராகரிப்பும் வழிகேடுமான இருள் மறைந்து இறைநம்பிக்கை, நேர்மை ஆகியவற்றின் விடியற்காலை உதயமாகிறது. திருக்குர்ஆனில் கூறப்படுவதாவது: 'அதில் - சக்தி மிக்க அந்த இரவில் - மலக்குகளும் ஒரு புதிய ஆவியும் தங்கள் இறைவனின் கட்டளையின்படியே எல்லா விவகாரங்களுடன் இறங்குகின்றனர். சாந்தி சமாதானத்துடன் விடியற் காலை உதயமாகும் வரை.' (திருக்குர்ஆன் 97:5,6) இன்னும் சொல்லப்போனால் வானத்திலிருந்து வானவர்களும் பரிசுத்த ஆவியும் இறங்கி வருவது என்பது ஒரு மகான் - தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் இறைவனின் பிரதிநிதியாகவும் இறையறிவிப்புகளால் ஆசீர்வதிக்கப்பட்டவராகவும் இப்பூமியின் மீது இறங்கும்போதுதான் நடைபெறுகிறது. பரிசுத்த ஆவி அந்த மனிதருக்காக சிறப்பான வேலை செய்யுமாறு ஏவப்பட்டிருக்கிறது.

*(ஃபத்ஹே இஸ்லாம். அடிக்குறிப்பு ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 12).*

## 21. யாஜூஜ் மாஜூஜ் ஆகியோரின் உண்மைத்தன்மை

யாஜூஜ் மாஜூஜ் எனப்படுவோர் நெருப்பை பல்வேறு துறைகளில் பயன்படுத்துவதில் மற்றவர்களை விட வல்லவர்களும் அதில் நிபுணத்துவம் பெற்றவர்களும் ஆவர். அவர்களின் பெயர்களும் (அரபி மொழியில் யாஜூஜ் மாஜூஜ் என்ற சொற்கள் அஜீஜ் என்ற மூலச் சொல்லிலிருந்து வந்ததாகும்) அவர்களின் கண்டுபிடிப்புகளாகிய கப்பல், தொடர் வண்டி மற்றும் எந்திரங்கள் ஆகியவையும் நெருப்பினால் இயங்குவதை சுட்டிக் காட்டுகின்றன. மேலும் அவர்கள் நெருப்பைக் கொண்டே போரிடுவார்கள். நெருப்பை பயன்படுத்தும் திறனில் உலகிலுள்ள எல்லா சமுதாயங்களையும் விட சிறந்து விளங்குவர். இதனாலேயே அவர்கள் யாஜூஜ் மாஜூஜ் என அழைக்கப்படுகின்றனர். அவர்கள் ஐரோப்பிய சமுதாயமாவர். அவர்கள் எந்த அளவுக்கு நெருப்பை பயன்படுத்துவதில் ஆற்றலும், திறமையும், அறிவுக் கூர்மையும், தொழில் நுட்பமும் வாய்ந்தவர்கள் என்பதை எடுத்துரைக்கத் தேவையில்லை. இஸ்ரேல் தூதர்களுக்கு வழங்கப்பட்ட சென்ற கால நூல்களிலும் ஐரோப்பிய மக்களையே யாஜூஜ் மாஜூஜ் எனக் கூறப்பட்டுள்ளது. அது மட்டுமன்று. பழங்கால ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவின் பெயரும் எழுதப்பட்டுள்ளது. எனவே (கோக் மகோக்) யாஜூஜ் மஜூஜ் காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவார் என விதிக்கப்பட்டது.

*(அய்யாமுஸ் ஸுலஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி **14** பக்கம் 424-425)*

## 22. ஒளியின் காலம்

பருவக் காலத்தின் கனிகள் தோன்றுவது போன்று இந்த ஒளியும் உரிய நேரத்தில் இறங்குகிறது. அது தானாகவே இறங்குவதற்கு முன் யாராலும் அதைக் கொண்டு வரவும் முடியாது; அது இறங்கும்போது அதை யாரும் தடுத்து நிறுத்தவும் முடியாது. வேற்றுமைகளும், கருத்து வேறுபாடுகளும் இருந்தாக வேண்டும்; ஆயினும் முடிவில் உண்மை நிலைபெறும். ஏனெனில் இது மனிதனின் வேலையன்று; மனிதக் குமாரனுக்கு இதில் எந்தப் பங்கும் இல்லை. இது, பருவக் காலங்களை மாறச் செய்யும்; காலத்தை நகரச் செய்யும்; இரவைப் பகலாகவும், பகலை இரவாகவும் மாற்றும் இறைவனின் செயலாகும்.

அவன் இருளைப் படைத்திருக்கிறான். ஆனால் அவன் ஒளியை விரும்புகிறான். அவன் ஷிர்க்கை- இறைவனுக்கு இணைவைக்கும் பல தெய்வ வழிபாட்டை பரவ விட்டிருக்கிறான். ஆனால் தவ்ஹீதை - ஓரிறை கொள்கையை அவன் பெரிதும் விரும்புகிறான். அவன் தனது மகத்துவம் வேறு யாருக்கும் கொடுக்கப்படுவதை விரும்புவதில்லை. மனிதன் பிறந்த நாள் முதல் மனிதன் உலகிலிருந்து மறையும் நாள் வரை இறைவன் தனது தவ்ஹீதை - அவனது ஏகத்துவத்தை ஆதரிக்கின்றான் என்பதே அவனுடைய இயற்கைச் சட்டமாகும்.

*(மஸீஹ் ஹிந்துஸ்தான் மே. ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 65)*

*இறைவா! எல்லாம் படைத்தவனே! குறைகளை மறைப்பவனே! எல்லாம் வல்லவனே என் அன்பனே! எனக்கு அருள் பாலிப்பவனே! என் பாதுகாவலனே.*

*நீ என்னை விரும்பியது முற்றிலும் உன் அருளும் கருணையுமே ஆகும். மற்றபடி உன் சன்னிதியில் தொண்டர்களுக்கு என்றும் குறைவில்லை.*

*நண்பர்கள் என தம்பட்டமடித்தவர்கள் எல்லாம் பகைவர்கள் ஆகிவிட்டனர் ஆனால் தேவையை நிறைவேற்றுபவனே! என்றும் நீ என்னை கைவிட்டதில்லை.*

*ஒப்பற்ற நண்பனே! உயிரின் அடைக்கலமே! எனக்கு நீயே போதும். நீயன்றி நானில்லையே.*

*உன் அன்பை இழந்திருப்பின் மண்ணோடு மண்ணாகி இருப்பேன் பின்னர் அப்புழுதி எங்கே எறியப்படும் என்பதை இறைவனே நன்கறிவான்.*

*இறைவனே! என் உடல் உயிர் உள்ளம்எல்லாம் உன் வழியிலே! உன்னைப் போன்று ஓர் அன்பனை காண்பதில்லையே.*

*உன் நிழலிலே என் ஆரம்ப நாள்கள் கழிந்தன.உன் மடியிலே பால் அருந்தும் குழந்தை போன்று நான் வளர்ந்தேன்.*

*உன்னைப்போன்று அன்புடையாரை உலகினில் எங்கும் கண்டதில்லை. உன்னைப் போன்று இரக்கமுள்ள நண்பனை என்னால் எங்கும் காணமுடியவில்லை.*

*தகுதியற்றவன் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லையாம்!*
*தகுதியற்ற எனக்கோ உன் அவையில் உயர் தகுதி*
*கிடைத்துள்ளதே!*

*எனக்காக பொழிந்த உனது அருளும் உதவியும் இறுதி நாள் வரையில் என்னால் எண்ணி முடியாத அளவினவே!*

***(பராஹீனே அஹ்மதிய்யா. பாகம் 5. ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 127***